# இந்திய ஜனதிபதி: காங்கிரஸ் வேட்பாளர் பெயர் இந்த வாரம் தெரியும்

Registered as a News paper in Ceylo விலே சதம் 15 ★

ஈழநாடு சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற்பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49
போன்: 389
National Tamil Daily
மலர் 11
இதழ்:125
தேசிய தின சரி

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

யாழ்ப்பாணம் ஆனி 3 ரபி;ஆகி 1 செவ்வாய்க்கிழமை [17-6-69]

# படித்த வாலிபருக்கு வேலை வாய்ப்பளிக்க புதிய சட்டம்

## நிதி அமைச்சர் தயாரிக்கிறார்

கோட்டை, திங்கள்

வேலையற்றிருக்கும்படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பளிப்பதற்கு நிதிஅமைச்சர் திரு. யு. பி. வன்னிநாயகா புதியதொரு திட்டத்தை வகுத்துள்ளார். இதற்கான சட்டமொன்றை உருவாக்கவும்அவர் முயற்சி மேற்கொண்டுள்ளார்.

55அல்லது60 வயதில்அரசாங்கத்திலிருந்து பென்ஷன் எடுத்தவர்களுக்கு தனிப்பட்ட ஸ்தாபனங்களில் வேலை வாய்ப்பு வழங்குவதைக் கட்டுப்படுத்துவதே அமைச்சரின்புதிய திட்டம்.

இதன் மூலம் வேலையற்றிருக்கும் படித்த வாலிபர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கலாமெனஅமைச்சர் கருத்துக் கொண்டுள்ளார்.

வயது காரணமாக இவ் கொண்டவர்களை தனிப்பட்ட ஸ்தாபனங்களில் வேலைக்கமர்த்துவது குற்றமாகும் வகையில் சட்டம் தயாரிக்கப்படும் எனவும் தெரியவருகிறது.

## ‘விரைவான முன்னேற்றத்துக்கு விஞ்ஞானம் அவசியம்’

யாழ்ப்பாணம், செவ்.

அமெரிக்க தகவல் பகுதியினரால் ஒழுங்கு செய்யப்பட்ட விஞ்ஞான கருத்தரங்கு சென்ற ஞாயிற்றுக்கிழமை யாழ். பொது நூல் நிலையத்தில் நடைபெற்றது.

பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்ட இலங்கைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு. நோர்மன் ஞெத்வெல் உரையாற்றுகையில் மனிதன் வாழ்க்கையில் பூரணத்துவத்தை யடைவதற்கு விஞ்ஞானம் பேருதவியளிக்கிறது எனக் குறிப்பிட்டார்.

அடுத்து உரையாற்றிய திரு. பி. ஜெ. அலெஸ் ‘இலங்கையில் எதிர்காலத்தில் விஞ்ஞான்ம் கற்பித்தல்’ என்னும் விடயம் பற்றி உரைநிகழ்த்தினர். அவர் பேசுகையில்:

‘விஞ்ஞானம் தொடர்பாக அபிவிருத்தியடைந்து வருவதொன்றுகும். இந்த விஞ்ஞான அபிவிருத்திகளுக் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். சிலர் விஞ்ஞானத்தை அழிவுக் கருவியாகவும் கெட்ட சாதனம் எனவும் எண்ணுகிறுர்கள். விஞ்ஞானத்தை இவ்வாறு கணிக்காது மனிதவர்க்கத்தின் விரிவான முன்னேற்றத்து பிரயோசனமான ஒரு சாதனமாகக் கருதி ஒவ்வொருவரும் இது சம்பந்தமான நல்ல அறிவைப் பெறுவது அவசியம் என்றுர். விஞ்ஞானிகளுக்குத்தான் விஞ்ஞானம் என்ற கருத்துத் தவறுனதாகும் எனவும் அவர் குறுப்பிட்டார்.

மேற்படி கருத்தரங்கம் நடைபெற்ற அன்று நடைபெறவிருந்த விஞ்ஞான புத்தக் கண்காட்சி நடைபெறவில்லை. இக்கண்காட்சி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## இணுவில்வாசிக்கு சுவீப் முதல்பரிசு

— நமது அளவெட்டி நிருபர் —

யாழ்ப்பாணம், செவ்.

சென்ற வியாழக்கிழமை லியாங்கொடை நகரசபையில் வைத்து இழுக்கப்பட்ட 250-வது சீட்டிழுப்பில் முதலாவது பரிசை இணுவிலைச் சேர்ந்த தம்பாப்பிள்ளைசெல்லையா பெற்றுள்ளார்.

இவர் முதற்பரிசுக்கான 16 A 0998 என்ற டிக்கட்டை வாங்கி முதற்பரிசைப் பெற்றுள்ளார்.

இவர் இதுபற்றி சுன்ஞகம் பொலிசில் அறிவித்துள்ளார்.

இந்த டிக்கட் யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்க ஸ்தாபனத்தார் விற்பனை செய்த டிக்கட் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புதுடில்லி, ஜுலை 19

பாரதத்தின் அடுத்த ஜனதிபதிபதவிக்கு போட்டியிட யாரை நியமிப்பது என்று இந்த வார இறுதிக்குள் காங்கிரஸ் கட்சி ஒரு முடிவுக்கு வந்துவிடும். இத்தகவலை காங்கிரஸ் தலைவர் திரு. நிஜலிங்கப்பா நிருபர்களிடம் கூறினர்.

இப்போதுள்ள நிலையில் இடைக்கால ஜனதிபதியாயிருக்கும் திரு. வி. வி. கிரியையே அப் பதவியில் நீடிக்கச்செய்ய வேண்டும் என்று காங்கிரஸ்காரர்கள் கருதுவதாகத் தெரிகின்றது.

உணவுஅமைச்சர் ஜீவன்ராம் ஜனதிபதி தேர்தலில் போட்டியிட விரும்பவில்லையென்று கருதப்படுகின்றது. என்றுலும் அவரையே அப் பதவிக்கு வேட்பாளராக நியமிக்கவேண்டுமென்று காங்கிரஸ்காரர்கள் பலர் விரும்புகிறுர்கள். திரு. காமராஜின் பெயரும் திரு. நிஜலிங்கப்பாவின் பெயரும் கூட அடிபடுகின்றது.


சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணை இப்பதவிக்கு போட்டியிட நிறுத்தவேண்டுமென்றும் சில கட்சிகள் கருதுகின்றன. ஆனுல் ஜெயப்பிரகாஷ் இதற்கு இணங்குவாரா என்று சிலர் சந்தேகம் தெரிவிக்கிறுர்கள். தென்னுட்டைப் பொறுத்தவரையில் திரு. கிரிக்கும் திரு. ஜகஜீவன்ராமுக்கும் ஆதரவு அதிகமாக இருப்பதாகக் கருதப்படுகின்றது.

ஓய்வுபெற்ற சேனதிபதி ஜெனரல் குமாரமங்கலத்தை ஜனதிபதியாக்க வேண்டுமென்று ராஜாஜி கூறிய யோசனைபற்றி அரசியல் வட்டாரங்களில் அதிக சலசலப்பு ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

### ஈழநாடு பத்தாண்டு நிறைவு விழா

## ‘தமிழர்களால் தமிழருக்காக நடத்தப்படும் ஒரே தமிழ்ப்பத்திரிகை ‘ஈழநாடு’மட்டுமே’

### — நகர முதல்வர் திரு எஸ் நாகராஜா



யாழ்ப்பாணம், செவ்வாய்

“இலங்கையில் வாழும் தமிழ்மக்களுக்காகத் தமிழ் மக்களால் நடாத்தப்படும் ஒரு தமிழ்த் தினசரி ஈழநாடு மட்டுமேதான். தமிழ் மக்கள் தங்கள் பத்திரிகை என்று உரிமை கொண்டாடக்கூடிய பத்திரிகையும் ‘ஈழநாடு’ மட்டுமேதான்.”

‘ஈழநாடு’ பத்தாவது ஆண்டு நிறைவு விழாவின் இறுதிநாள் நிகழ்ச்சிகளை யாழ். திறந்தவெளியரங்கில் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் யாழ் நகரமுதல்வர் திரு எஸ். நாகராஜா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:-

இந்த நாட்டிலிருந்து வெளிவரும் தினசரிப் பத்திரிகைகள், குறிப்பாக ஆங்கிலத் தினசரிகள் சரித்திரபூர்வமான உண்மையைத் திரித்துக்கூறி வருகின்றன. தமிழ் மொழியையும் இனத்தையும் கலை, கலாச்சாரத்தையும் அழித்துச் சிதைக்கும் முயற்சியில் அவை ஈடுபட்டு வருகின்றன.

இந்த வேளையில் தமிழ் மக்களுக்காக அவர்களது கலை, கலாச்சார, மொழியைப் பாதுகாக்கப் பாடுபடும் ஒரே தினசரி ஈழநாடு மட்டும் தான் என்றுல் மிகையாகாது. இது விளம்பரத்துக்காகவல்ல. முற்றிலும் உண்மையே

கட்டுப்பாடில்லாமல் ஜனநாயகக் கோட்பாட்டுக்கு அமைய ஈழநாடு தொடர்ந்து வெளியிடவேண்டுமென்றுதான் விருப்பம் தெரிவித்த திரு. நாகராஜா இவ்விழாவைப் பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டு நின்றுபார்க்கச் சிறப்பாக ஒழுங்கு செய்தமைக்காக ஈழநாடு ஸ்தபானத்திற்கு நன்றி தெரிவித்தார்.

(கா. நி)

## காதலனுடன் செல்ல அனுமதி

மட்டுவில், திங்கள்

‘நான் என் காதலனுடன் தான் போவேன் தந்தையுடன் போகமாட்டேன்’ என்று சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் திரு. கே. விக்னராஜா முன்னிலையில் இந்திரலீலா என்ற இளம் பெண் கூறினர்.

இந்த வழக்கில் பளை பொலிஸ் பகுதியைச் சேர்ந்த இந்திரலீலா என்ற இளம் பெண்ணை அவர் தந்தையின் பாதுகாப்பிலிருந்து கடத்திச் சென்றதாக அதே ஊரைச் சேர்ந்த வில்லி தியாகராஜா என்பவர்மீது இந்திரலீலாவின்

## மல்லாகத்தில் கத்தி வெட்டுச் சம்பவம்

அளவெட்டி, திங்கள்

மல்லாகம் கிராமசபைத் தேர்தல் எதிரொலியாக மேற்படி கிராமசபைக் குட்பட்ட அளவெட்டி தெற்குப் பகுதியில் நேற்று பாளைக்கத்தி வெட்டுச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இச் சம்பவத்தில் குலசிங்கம் என்பவர் உட்பட இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இவர்கள் தற்போது ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் குறித்து சுன்ஞகம் பொலிசார் இருவரைத் தேடிவருகின்றனர்.

‘சுபாஸ் சந்திரபோஸ்

## உயிருடன் இருந்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் விடயம் பற்றி உரைநிகழ்த்தினர். அவர் பேசுகையில்:

'விஞ்ஞானம் தொடர்பாக அபிவிருத்தியடைந்து வருவதொன்றாகும். இந்த விஞ்ஞான அபிவிருத்திகளுக்கேற்ப விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியர்கள் தங்களைத்

மேற்படி கருத்தரங்கம் நடைபெற்ற அன்று நடைபெறவிருந்த விஞ்ஞான புத்தக் கண்காட்சி நடைபெறவில்லை. இக்கண்காட்சி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் வேலையற்றிருக்கும் படித்த வாலிபர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கலாமென அமைச்சர் கருத்துக் கொண்டுள்ளார்.

வயது காரணமாக இவ்விதம் ஓய்வு எடுத்துக்

250-வது சீட்டிழுப்பில் முதலாவது பரிசை இணுவிலைச் சேர்ந்த தம்பாப்பிள்ளை செல்லையா பெற்றுள்ளார்.

இவர் முதற்பரிசுக்கான 16 A 0998 என்ற டிக்ளார்.

இந்த டிக்கட் யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்க ஸ்தாபனத்தார் விற்பனை செய்த டிக்கட் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தந்தையின் பாதுகாப்பிலிருந்து கடத்திச் சென்றதாக அதே ஊரைச் சேர்ந்த வில்லி தியாகராஜா என்பவர்மீது இந்திரலீலாவின் தந்தை பளை பொலிஸில் ஒரு முறைப்பாட்டைப் பதிவு செய்திருந்தார். இதனைத் தொடர்ந்து காங்கேசன்துறைப் பொலிசாரின் உதவியுடன் மயிலிட்டியில் வைத்து இந்திரலீலாவையும் தியாகராஜாவையும் கைது செய்த பளைப் பொலிசார் சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் திரு. க. விக்னராஜா முன்னிலையில் இவர்களை ஆஜர் செய்தனர்.

விசாரணையின்போது இந்திரலீலா தந்தையுடன் செல்ல மறுக்கவே தியாகராஜாவின் வழக்கறிஞர் திரு. வி. செல்லத்தம்பி இந்திரலீலாவுக்கு இப்பொழுது 16 வயதும் 3 மாதமும் ஆகிறது என்று பிறப்பு பத்திரம் மூலம் அத்தாட்சிப்படுத்தினர். மாஜிஸ்டிரேட் காதலருடன் செல்ல அவரை அனுமதியளித்து எதிரியை விடுதலை செய்தார்.

## பெண்கடத்து வழக்கில் எதிரிக்கு சிறைத்தண்டனை

மட்டுவில், செவ்வாய்

நுணுவில் பெண் கடத்து வழக்கில் எதிரிக்கு 6 மாத சிறைத் தண்டனை விதித்து சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் திரு. கே. விக்னராஜா தீர்ப்பளித்தார்.

நுணுவில் மேற்கைச் சேர்ந்த 13 வயது பள்ளி மாணவியான அழகநாயகியை அதே ஊரைச் சேர்ந்த அவரது உறவினரான ஸி. படைவீரசிங்கம் என்ற வாலிபர், அவர் பாடசாலையிலிருந்து வீடு திரும்புகையில் பாதி வழியில் வைத்து பலாத்காரமாகக் கடத்திச் சென்றதாக சாவகச்சேரிப் பொலிசாரால் வழக்குத் தொடரப்பட்டிருந்தது. இவ்வழக்கில் குற்றவாளியாகக் கண்ட மாஜிஸ்டிரேட் அவருக்கு ஆறு மாதச் சிறைத் தண்டனை விதித்தார்.

இந்தத் தீர்ப்பை ஆட்சேபித்து எதிரி அப்பீல் செய்து கொள்ளப்போவதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து மாஜிஸ்டிரேட் அவரை 1,500 ரூபா பிணையில் செல்வதற்கு அனுமதித்தார்

## "ஆங்கில ஆசிரியரை நியமிக்குக"

ஊர்காவற்றுறை, திங்.

அல்லைப்பிட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலையில் ஆங்கில ஆசிரியர் இல்லாமையால் ஆங்கிலம் கற்கும் மாணவர் கஷ்டமுறுகின்றனர். எனவே! பிரஸ்தாப வித்தியா சாலைக்கென ஒரு ஆங்கில ஆசிரியரை நியமிக்க வேண்டுமென பெற்றோர் ஆசிரியர் சங்கம் கல்வி இலாகாவைக் கேட்டுள்ளது.

தலைமை ஆசிரியர் திரு. தோமஸ் செல்லத்துரை தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

# அளவெட்டிக்கு நீதி உதவி அமைச்சர் விஜயம்

அளவெட்டி, திங்கள்

இன்று காலை நீதி உதவி அமைச்சர் ஜனாப் என். எம். ஏச். எம். நயினாமரக்கார் அளவெட்டிக்கு விஜயம் செய்தபோது அவருக்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

மல்லாகம் - அளவெட்டி இணக்கசபையைச் சட்டரீதியாக ஆக்கி அங்குரார்ப்பணம் செய்துவைப்பதற்காக உதவிஅமைச்சர் இங்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். உதவி அமைச்சருடன் இணக்கசபை நிர்வாகக் காரியதரிசி திரு ஸ்ரீ வர்தனாவும் வந்திருந்தார்.

உதவி அமைச்சரை யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளையும் மற்றும் பிரமுகர்களும் வரவேற்றனர்.

## 'கூட்டுறவு இயக்கம் சீரழிந்த நிலையிலிருக்கிறது'

### திரு. எஸ். ஜே. வி. கூறுகிறார்

அளவெட்டி, திங்கள்

'கூட்டுறவு இயக்கம் என்பது ஜனநாயக அடிப்படையில் ஊருக்கு முக்கிய தேவையான இயக்கமாகும். இவ்வியக்கம் நல்ல முறையில் எமது நாட்டில் அமையாது சீரழிந்த நிலையில் தான் இன்றுஇருக்கின்றது. ஆனால் இந்த சமாஜம் அதற்கு விதிவிலக்கானது. இதனுடைய 25 வருட சேவைகளையும் நான் மெச்சுகிறேன்..

இவ்வாறு வலிவடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சமாச வெள்ளிவிழா நேற்றுமாலை உடுவில் கிராமசபை திறந்த வெளியரங்கில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தமிழரசுத் தலைவரும் காங்கேசன்துறை எம். பி. யுமான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கூறினார்.

மேற்படி சமாசத் தலைவர் திரு. க. நாகலிங்கம் தலைமையில் நிகழ்ந்த இக்கூட்டத்தில திரு. செல்வநாயகம் தொடர்ந்து பேசியதாவது:

எமது நாட்டின் அபிவிருத்திக்கு அவசியமானது கைத்தொழில். ஆனால் அரசாங்கத்திடமிருந்து உத்தரவு பெற்றே கைத்தொழிலை ஆரம்பிக்கவேண்டும். ஆனால் இன்று தமிழரிலும் பார்க்க தென்னிலங்கையில் உள்ளவர்கள்தான் கூடுதலாக கைத்தொழிலை ஆரம்பித்துள்ளனர். ஆதலால் தமிழரும் இத்துறையில் கூடிய கவனம் செலுத்தவேண்டும்.

யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை பேசுகையில் கூறியதாவது:

கூட்டுறவு இயக்கம் தமிழ் மக்களுக்கு இறைவனால் தரப்பட்ட ஒரு வரப்பிரசாதமாகும். இவ்வியக்கம் வறிய மக்களின் இயக்கமே தவிர பணக்காரரின் இயக்கம் அல்ல. வறிய மக்கள் கூட்டுறவு முறையில் ஒன்று சேர்ந்து அரசாங்கத்திடம் இருந்து கடன் பெற்று தமது தொழிலை விருத்தி செய்யக் கூடிய நிலை இன்று இங்கு உருவாகியுள்ளது. இத்துடன் உபகரணங்கள் போன்ற வசதிகளையும் இந்த கூட்டுறவு முறையால் மிக இலகுவாகப் பெறலாம்.

தமிழ் மக்களுக்கு இன்றியமையாத சேவை செய்யக் கூடிய கூட்டுறவு இயக்கங்கள் பற்றி நாம் அறியவில்லை. 'கூட்டுறவே நாட்டுயர்வு'

திரு. சிவஞானம் பேசுகையில்:- நேர்மை மூலம் தான் கூட்டுறவில் சிறப்படையலாம். கூட்டுறவு இயக்கங்களில் வேலை புரிவோருக்கு போதிய ஊதிபம் கிடைக்கக்கூடியதாக கூட்டுறவுச் சட்டங்கள் திருத்தப்பட வேண்டும் என்றார்.

இவ்விழாவில் மற்றும் பலரும் உரையாற்றினர். கலைநிகழ்ச்சிகளும்இடம்பெற்றன,

## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், செவ்.

திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மகா அஷ்டோத்திர சகஸ்தர சங்காபிஷேகம் அடுத்த மாதம் 2-ம் திகதி நடைபெறவிருக்கின்றது.

அலங்காரப் பூஜை, சங்காபிஷேகம், நாதஸ்வரம் ஆகியனவும், சுவாமி அம்பாள் திருவிழாவும் நடைபெறும்.

## நெடுந்தீவு மக்கள் கஷ்டம்

அல்லைப்பிட்டி, திங்கள்

நெடுந்தீவுப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிசாருக்குத்தமிழ் தெரியாததினால் வாக்குமூலம் கொடுக்கவரும் நெடுந்தீவு மக்கள் மிகுந்த கஷ்டத்தை அனுபவிக்கின்றனராம். இங்கு கடமையாற்றும் ஒருவருக்கு மட்டும்தான் தமிழ் பேசத் தெரியுமென்பது குறிப்பிடத்தக்கது.

## மூதூர்ஒளிபெறும்

மூதூர், திங்கள்

வெகுவிரைவில் மூதூர் நகரம் மின்ஒளியைச் பெறவுள்ளது. இதற்கு வேண்டிய கட்டிடத்திற்கு முன்னாள் உள்ளூராட்சி அமைச்சரும் தமிழரசுக்கட்சித் தலைவர்களில் ஒருவருமான செனட்டர் எம். திருச்செல்வம் முன்னர் அடிக்கல் நாட்டிவைத்திருந்தார்,

'சுபாஸ் சந்திரபோஸ்

## உயிருடன் இருந்தால் தாயகம் வந்திருப்பார்

புதுடில்லி, ஜூன் 16

நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் பற்றி என். ஜி. ஜோக் எழுதியுள்ள வாழ்க்கைச் சரித்திரம் ஒன்றை ஓரியண்ட் லாங்மன்ஸ் ஸ்தாபனம் பிரசுரித்துள்ளது.

நேதாஜி உண்மையிலேயே இறந்துவிட்டாரா அல்லது இன்னும் உயிருடன் இருக்கிறாரா என்ற தீராத சர்ச்சை பற்றி இதில் விவாதிக்கப்பட்டிருக்கிறது. பகுத்தறிவுக்குப் பொருத்தமான காரணங்களின்படி பார்த்தால், நேதாஜி இப்போது உயிருடன் இல்லையென்ற முடிவுக்குத் தான் வரவேண்டியிருக்கிறது என்று ஆசிரியர் தமது முன்னுரையில் கூறுகிறார்.

இதில் அவர் கூறுவதாவது:

சிறப்பு மிக்க, அவ்வளவு பிரபலமான ஒருவர் போன சுவடு தெரியாமல் மறைந்துவிட்டு, சுமார் கால் நூற்றாண்டு காலம் மாறுவேஷத்தில் காலந்தள்ளுவது என்பது நடக்கமுடியாத விஷயமாகும். அவர் மாண்டுவிட்டார் என்று அப்போது கட்டுக்கதை கட்டிவிடுவதற்கு ஏதாவது காரணம் இருந்திருப்பதாக வைத்துக் கொண்டாலகூட, அந்தச் சந்தர்ப்பத்தில் இருந்து சரியாக இரண்டு வருஷம் கழித்து பிரிட்டிஷார் வெளியேறிய நிமிஷத்திலேயே அந்தக் காரணத்துக்கு அவசியமில்லாமற் போயிருக்கவேண்டும்.

நாம் உயிருக்குயிராய் நேசித்த மக்களிடம் அவர் மீண்டும் திரும்பியிருக்கவேண்டும். குறைந்த பட்சம் வயது முதிர்ச்சியின் தளர்ச்சி காரணமாகவாவது, அவர் உற்றார் உறவினரிடம் திரும்பி வந்திருப்பார். நமது மனைவிக்கும் மக்களுக்கும் கடிதமாவது எழுதியிருப்பார்.

எனவே விமான விபத்தில் அவர் இறந்திருக்கவேண்டும் என்றே யூகிக்கவேண்டியிருக்கிறது. இதற்கு திட்டவட்டமான ருசுக்கள்கிடைக்காமல் போகலாம். ஆனால் இதைத்தவிர வேறு எவ்வித முடிவுக்கு வரமுடியாது என்று திரு. ஜோக் இந்த நூலில் கூறுகிறார்.

சுபாஷ்சந்திரபோஸ் தமது

(4-ம் பக்கம் பார்க்க)

# தங்கை மரணத்தில் சந்தேகம்; அக்காவும் அத்தானும் ரிமான்டில்

யாழ்ப்பாணம். செவ்.

அக்காவுக்கும் தங்கைக்குமிடையே நடைபெற்ற வாய்ச் சண்டையைத் தொடர்ந்து தங்கை மரணமான நிலையில் கிடக்கக் காணப்பட்டார். தனது அக்காவும், அத்தானும் தனக்கு நச்சுத்திராவகம் கரைத்துப் பருக்கியதாக இவர் எழுதிய கடிதம் ஒன்று மரண விசாரணையின்போது சமர்ப்பிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மரணமான தங்கையின் அக்காவான தவமணியும், அவரது கணவரும் மரணமானவரின் அத்தானுமான ஆறுமுகமும் இம்மாதம் 23-ம் திகதிவரை ரிமாண்டில்வைக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் திருநெல்வேலியிலுள்ள புதுவீதியில் நடைபெற்றது. மரணமான இராஜேஸ்வரியின் மரணம் பற்றி திரு. என். இராசநாயகம் விசாரணை நடத்தினார்.

பல் மாணிக்கத்தை மாவாக அரைத்து தனக்குப் பருக்கியதாகவும், தன்னைத் தனது அக்காவும் அத்தானும் அடித்துத் தொந்தரவு பண்ணியதாகவும் மரணமானவர் எழுதிவைத்த கடிதம் ஒன்று மரண விசாரணையில் சமர்ப்பிக்கப்பட்டது.

பிரேதபரிசோதனை செய்த டாக்டர் ஆர். ஞானசுந்தரம் இறந்தவரின் உடலில் அடிகாயம் இல்லையென்றும், அவருக்கு வற்புறுத்தி நச்சுத்திராவகம் பருக்கப்பட்டதற்கான அடையாளங்கள் எதுவும் காணப்படவில்லையென்றும் தெரிவித்தார்.

பொலிஸாரைப் புலன் விசாரணைசெய்யுமாறு உத்தரவிட்ட மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்தார்.

(கா. நி.)


## 'ஈழநாடு' 10-வது ஆண்டு விழாவை யொட்டி நடைபெற்ற

- ★ விளையாட்டுப் போட்டிகள்
- ★ அலங்கார, வர்த்தக ஊர்வலம்
- ★ விநோத உடைப் போட்டி
- ★ மர்ம மனிதன் போட்டி
- ★ கலை நிகழ்ச்சிகள்
- ★ வாணவிளையாட்டுகள்

ஆகியவை பற்றிய சுவையான தகவல்களை, இவற்றை ஒழுங்குசெய்த அமைப்பாளர்களே 'ஈழநாடு' தினசரியில் தொடர்ந்து எழுதுகிறார்கள்.

உங்கள் பிரதிக்கு முந்துங்கள்!

O புதிய அமைப்போடு
O பொலிவான முகப்போடு
O பொருத்தமான படைப்போடு

## 'ஈழநாடு' வாரமலர்

ஜூலை 6-ம் திகதி முதல் வெளிவருகிறது!

'ஈழநாடு' 10-வது ஆண்டுவிழாப் போட்டியில் பரிசு பெற்ற

- ★ சிறுகதைகள்
- ★ கவிதைகள்
- ★ காவியம்
- ★ ஓரங்க நாடகம்

எல்லாம் 'ஈழநாடு' வாரமலரில் ஜூலை 6-ம் திகதி முதல் தொடர்ந்து வெளிவரும்.

உங்கள் பிரதிக்கு இன்றே சொல்லிவையுங்கள்!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— படவிமர்சனம் —

# பொம்மலாட்டம்

— யோகி —

பிரபல கண்டாக்டரைத் தன் நண்பன்மூலம் கடத்தி அவரைத்தான் காப்பாற்றுவதாக நடித்து அவரின் பெருமதிப்பைப் பெற்று அவரின் மூத்த மகளான ஜெயலலிதாவை மணக்கத் திட்டமிடுகிறார் ஜெய்சங்கர். அதேநேரத்தில் சிங்கப்பூரிலிருந்து கண்டாக்டரிடம் சிகிச்சைபெறவரும் இளைஞனைக் கொலை செய்துவிட்டு அதே குருட்டு இளைஞனாக நடித்துக் கண் டாக்டரைக் கடத்தி அதன்மூலம் இரண்டு லட்சம்ரூபா பெறத் திட்டமிடுகிறார் கொள்ளைக்காரனான சுந்தரராஜன். ஜெய்சங்கரின் நண்பனான சோ, மயக்கமருந்துடன் டாக்டரைக் கடத்திச் செல்கிறார். அதேநேரத்தில் சுந்தரராஜனின் கையாளும் டாக்டரைக் கடத்திச்செல்கிறான். யார் டாக்டரைக் கடத்துகிறார்கள்? கொள்ளைக்காரனுக்கு 2லட்சம் கிடைக்கிறதா? டாக்டரை ஜெய்சங்கர் காப்பாற்றுகிறாரா? ஒவ்வொரு கட்டமும் அடுத்த கட்டத்தில் என்ன வரும் என்ற ஆவலைத் தூண்டும் விதத்தில் விறுவிறுப்பாகச் செல்கிறது.

திரைக்கதை வசனத்தை ‘சோ’ எழுதியிருப்பதால் நகைச்சுவைக்குக் குறைவில்லையென்பதைச் சொல்லத் தேவையில்லை. வழக்கமாக நாகேஷின் ஜோடியாக வரும் மனோரமா இதில் சோவின் ஜோடியாகி விடுகிறார். நாகேஷின் கருத்துள்ள நகைச்சுவை வெடிகளை நினைத்து நினைத்துச் சிரிக்கலாம். நாகேஷின் ஜோடியாக வரும் சச்சு ஒரு கட்டத்தில் மிகநெருக்கமாக நடிக்கும்போது கொஞ்சம்.........

கொள்ளைக்காரனாக வந்து குருட்டு இளைஞராக நடிக்கும் சுந்தரராஜன் தமது அனுபவ நடிப்பை நன்கு வெளிப்படுத்துகிறார். வழக்கமாக அடிக்கடி வரையும் கொக்குப்படம், அவரைக் கடைசியில் காட்டிக்கொடுத்துவிடுகிறது.

கலலூரி மாணவனாகவரும் ஜெய்சங்கர், நண்பர்களின் சவாலைஏற்று, காதலிப்பது போல் நடிக்கச்சென்று உண்மையாகவே ஜெயலலிதாவைக் காதலிக்க ஆரம்பித்து விடுகிறார். உடலோடு ஒட்டிய உடையுடன் வரும் ஜெயலலிதா, திமிர்பிடித்த பெண்ணாக இருந்தாலும், காதல்காட்சிகளில அடங்கிவிடுகிறார். அவருக்கே சொந்தமான உடலை வளைத்து நெளித்து ஆடும் நடனங்கள் இதிலும் இருக்கின்றன.

சில பாடல்கள் ஞாபகத்தில் இருக்கக்கூடியவை. சாயிபாபா படத்தினால் ஏற்படும் குழப்பங்கள் கொஞ்ச நேரத்தில நீங்கிவிடுகின்றன. ஸ்ரீநிவாசன் டைரக்ஷனில படம் விறுவிறுப்பாகச் செலகின்றது. இடைவேளைக்குப்பின்தான் ‘சஸ்பென்ஸ்’ ஆரம்பமாகிறது கொள்ளைக்கூட்டத்தாருடன் ஜெய்சங்கர் சுறுசுறுப்பாக மோதி அவர்களை மடக்கிப்பிடிக்க முயற்சிக்கின்றார். சண்டைப் பிரியர்களுக்கு குறைவைக்கவில்லை.

குடும்பத்துடன் சென்று படம் முடியும்வரை குலுங்கக்குலுங்கச் சிரித்து மகிழக்கூடிய ‘பொம்மலாட்டம்’ தற்பொழுது யாழ்ப்பாணம் வெலிங்டன் திரையில் ஓடிக்கொண்டிருக்கிறது.

REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
Burt Lancaster-Paul Scofield
in
THE TRAIN

வல்வெட்டித்துறை
ரஞ்சனா தியேட்டர்
சிவாஜி - கே.ஆர். விஜயா
நடித்த
தங்கை

வெஸ்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி6-30, இரவு10-00
பிரிபோயா, போயா 2-30மணி
அசோகன் — மணிமாலா
நடித்த
வல்லவனுக்கு
வல்லவன்
(புதிய கொப்பி)

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
ஜெய்சங்கர்
வரலக்ஷ்மி
நடித்த

# கூடைப்பந்தாட்டத்தில் புதிய ஆர்வத்தை ‘ஈழநாடு’ ஏற்படுத்தியது

## விளையாட்டு அமைச்சின் உதவி டைரக்டர் பாராட்டு

— நமது விளையாட்டு நிருபர் ‘‘தேவா’’ —

யாழ்ப்பாணம், திங்கள்

‘‘யாழ்ப்பாணத்தில், ரசிகர்களுக்கும், விளையாட்டு வீரர்களுக்கும், கூடைப்பந்தாட்டத்தில் புதிய ஆர்வத்தை ஏற்படுத்திய பெருமை, ‘ஈழநாடு’ ஸ்தாபனத்துக்கே உரியதாகும். இதற்கு இங்கு கூடியிருக்கும், மக்கள் சமுத்திரமே ஓர் ஏடுத்துக்காட்டாகும்.’’ இவ்வாறு ‘ஈழநாடு’ 10-வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடைபெற்று வந்த கூடைப்பந்தாட்டத்தின் இறுதிப் போட்டிக்கு, பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட விளையாட்டமைச்சின், உதவி டைரக்டர் டாக்டர் ஜே. சி. துரைசிங்கம் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: ‘‘வடமாகாணத்தில் இவ்வளவு காலமாக நடைபெற்று வந்த, கூடைப்பந்தாட்டப் போட்டிகளுக்கு இவ்வளவு பெரும் திரளான பார்வையாளர்களை இதற்கு முன் நான் பார்த்ததே இல்லை. ஆனால் ‘ஈழநாடு’ நடாத்திய இப்போட்டிக்கு தினமும் மக்கள் கூட்டம் நிறைந்து வழிவதைக் காணும் போதும், இந்த ஸ்தாபனம், நீண்ட ஆயுளைப் பெற்று, நாட்டுக்கும், மக்களுக்கும், விளையாட்டுத் துறைக்கும் நல்ல சேவை செய்ய வேண்டுமென, நான் ஆண்டவனைப் பிராத்திக்கின்றேன்.’’ என்றார்.

வடமாகாண கூடைப்பந்தாட்டச் சங்கத் தலைவர் திரு. செல்லையாவும், சென். பற்றிக்ஸ் கல்லூரியின் கூடைப்பந்தாட்டப் பயிற்சியாளர் திரு. ஞானரட்ணமும் ‘ஈழநாடு’ ஸ்தாபனத்தைப் பாராட்டினர்.

### சென். பற்றிக்ஸ் சாம்பியன்

வலைப்பந்தாட்டத்தின் இறுதிப் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரியும், வட்டுக்கோட்டை ‘‘ஓல்ட் கோல்ட்ஸ்’’ விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன. இப் போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை மக்கள் மத்தியில் பெரும் ஆர்வமும் ஆரவாரமும் ஏற்பட்ட வண்ணமே இருந்தது.

இப்போட்டிஆரம்பமாகியவுடன் சென். பற்றிக்ஸ் கல்லூரியினர் முதலில் புள்ளிகளை சேகரிக்கத் தொடங்கினர். ஆனால் ‘ஓல்ட் கோல்ட்ஸ்’ கோஷ்டியினரும் எதிர்க் கோஷ்டியினருக்கு விட்டுக் கொடுக்காமல் புள்ளிகளை சேரித்த வண்ணமேயிருந்தனர். சென். பற்றிக்ஸ் கோஷ்டியினர், மின்னல் வேகத்தில் புள்ளிகளை சேகரிக்க பல தடவைகள் முன்னேறிய போதிலும், ‘ஓல்ட் கோல்ட்ஸ்’ கோஷ்டியினர் இவர்களை தடுத்து விட்டனர். இடைவேளையின் போது சென். பற்றிக்ஸ் 25 புள்ளிகளையும், ஓல்ட் கோல்ட்ஸ் கோஷ்டியினர் 19 புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

இடைவேளையின்பின் ஆட்டம் மிக உச்சக்கட்டத்தை அடைந்தது. சென்பற்றிக்ஸ் கோஷ்டியின் வீரர் பலரை ஓல்ட் கோட்ஸ் கோஷ்டியின் வீரர் வேகமாக புள்ளிகளை அண்மையில் நின்று சேகரிக்க முடியாதபடி தடுத்த போதிலும் பற்றிக்ஸ் கோஷ்டியின் வீரர்களான சத்தியானந்தாவும் பொன்ராஜாவும் மிகவும்தூரத்தில்நின்று கூடையை நோக்கி பல முறை பந்தைவீசி புள்ளிகளைச் சேகரித்தது. ரசிகர்களின் பெரும் கரகோஷத்தைப் பெற்றனர். ‘ஓல்ட் கோல்ட்ஸ்’ கோஷ்டியின் காப்டன் செல்வராஜன் பல தந்திர வழிகளைக் கையாண்டு கூடுதலான புள்ளிகளை தமது கோஷ்டிக்கு பெற்றுக் கொடுத்தார். சென் பற்றிக்ஸ் கோஷ்டியின் காப்டன் பற்றிக்கும் விஜயரட்ணமும் மின்னல் வேகத்தில் பந்தை கொண்டு சென்று எதிர் கோஷ்டியினரை நிலைகுலையச் செய்து புள்ளிகளை மிக இலகுவாக சேகரிப்பதற்கு பல தடவைகள் உதவி செய்தனர்.

ஆட்ட முடிவில் சென் பற்றிக்ஸ் கல்லூரி ஓல்ட் கோல்ட்ஸ் விளையாட்டுக் கழகத்தினரை 44--35 புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சாம்பியன் வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்தனர்.

மின்ஒளியில் நடைபெற்ற இப்போட்டிக்கு திருவாளர்கள் சுந்தரலிங்கமும் பாலசிங்கமும் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர்.

(தே. நி)

## இன்றைய பலன்

ஆனி மாதம் 3-ம் திகதி

17-6-69

மேஷம்- மக்களால் மகிழ்ச்சி, மனம் நிறைந்த வாழ்வு, புதுமையில் நாட்டம், புதுப் பொலிவும் உண்டு.

ரிஷபம்- தானிய நஷ்டத்தால் கவலைகள் தலைகாட்டும், தனிவழியை நாடுவீர், அமைதியும் பறக்கும்.

மிதுனம்- குடும்பத்தில் பிணி, மனதிலே சுமை. அலைமோதும் வாழ்க்கை தெய்வமே துணை.

கடகம்- சொற்சிலம்பம் ஆடுவதில் மற்றவரைச் சொக்கவைப்பீர். சொகுசான நாள், இன்று

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

செவ்வாய் 17—6—69

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

244 மீ அல் 61 மீ

காலை 6-30 [illegible],
6-35 சைவ நற்சிந்தனை,

## கொக்குவில் வென்றது

கொக்குவில், ஞாயிறு

## நாய் ஒன்றுக்கு ரூ. 7-50 வரி

சாய்ந்தமருது, திங்கள்

கரைவாகுதெற்கு (சாய்ந்தமருது) கிராமசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வளர்க்கப்படும் நாய் ஒன்றுக்கு வருடம் ரூ. 7-50 வரி விதிக்கப்பட்டுள்ளது.

கரைவாகு தெற்கு (சாய்ந்தமருது) கிராமசபையின் மாதாந்தக்கூட்டம் மேற்படி சங்க அலுவலகத்தில் தலைவர் ஜனாப் ஏ. எம். ஆதம்வாவா தலைமையில் நடைபெற்றபோது மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது

## மாணவர் சுற்றுலா

ஆனையிறவு, திங்கள்

ஆனையிறவு அரசினர் தமிழ்-சிங்கள வித்தியாலய மாணவர்களும் ஆசிரியர்களும் தலைமை ஆசிரியர் திரு. ஏ. கே. இராசேந்திரம் தலைமையில் கல்விச் சுற்றுலா சென்றனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள சரித்திர சமய, சம்பந்தமான இடங்களையும்அரசாங்கக்காரியாலயங்களையும் பார்வையிட்டனர். நயினாதீவுக்குச் சென்று இந்து, பௌத்த ஆலயங்களில் நடைபெற்றஆராதனைகளில் கலந்துகொண்டனர். ‘ஈழநாடு’ அலுவலகத்தையும், ஈழநாடு நடத்திய கலைவிழாவையும் கண்டுகளித்துத் திரும்பினர்.

## பொருட்காட்சி

பருத்தித்துறை, திங்கள்

உடுப்பிட்டி வட்டாரப் பாடசாலைகளுக்கான கல்வி நூற்றாண்டு பொருட்காட்சி விழா அடுத்த மாதம் 3-ம் 4-ம் திகதிகளில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

## விரைவில் போட்டி

சாய்ந்தமருது, திங்கள்

ஏறாவூர்ப்பற்று விளையாட்டுச்சபை மட்டக்களப்பு மாவட்ட கைப்பந்தாட்ட வீரர்கள் மத்தியில் கைப்பந்தாட்டத்துறையில் ஆர்வத்தையும் புத்துணர்ச்சியையும் ஊட்டுமுகமாக விரைவில் கைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி யொன்றை நடாத்தவிருக்கின்றனர்.

## மோதகடூழியம்

அல்லைப்பிட்டி, திங்கள்

வேலனை கிழக்கைச் சேர்ந்த ஆறுமுகம் சின்னத்தம்பி என்பவரையும் அவரது மனைவியான செல்லமுத்து என்பவரையும் அதே இடத்தைச் சேர்ந்த பொன்னையா சுப்

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கார்:

கம்பர் கோக் (Humber-Hawk) EN 7610 & போக்வாட் (Bougward) 2ஸ்ரீ 7610 சொந்தப்பாவிப்பிலுள்ள வெகு நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். ஜு. இரட்சகன், சித்தங்கேணி. 1034

காணி:

வண்ணார்பண்ணை, கல்லூரி ஒழுங்கையில் இரண்டு பரப்புக்காணி கிணற்றுடன் உடன் விற்பனைக்குண்டு விபரங்கட்கு: 45, புங்கங்குளம் றோட், யாழ்ப்பாணம். 1035

### தேவை

கண்டியிலுள்ள நிறுவனமொன்றை நிர்வகிக்க ஒருவர் தேவை. 1000 ரூபா பிணை கட்டக்கூடியவர் மட்டும் நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். வர்த்தக ஓவியம் வரைபவர்களும் தேவை யாழ்ரன் ஏஜென்ஸி, 170, கொழும்பு வீதி, கண்டி. 1039

எங்கள் நிர்மலா நெசவு நிலையத்திற்கு நல்ல அனுபவமுள்ள பெண் நெசவாளர் தேவை தங்குவதற்கு விடுதி வசதி உண்டு. கூலிவிபரம்: 2/100 முகதலை டெக்கா 6 யார் ரூபா 5/50. உடல் டெக்கா 6 யார் ரூபா 6/50 நூல்தரத்திற்கேற்ப கூட்டிக் கொடுக்கப்படும். நேரில் தொடர்பு கொள்க. க. சிற்றம்பலம் அன் சன்ஸ், நெல்லியடி, கரவெட்டி. 1037

### தேவை

தேவன்ஸ் தயாரிப்புகளை தயார் செய்வதற்கு பெண்பிள்ளைகளும், விற்பனைசெய்வதற்கு ஆண்களும் தேவை. நேரில் வரவும் ‘தேவன்’ஸ் இன்டஸ்றீஸ், 51, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 1038

### Wanted

Wanted Assistant for a Bar. Security Rs 350/- Salary Rs 60/- Age 18—25. Apply before 25-6-69 Advt. No. 1036, C/o Eela-nadu Jaffna. 1036

### கல்வி

கலை / விஞ்ஞானம் / வர்த்தகம் ஆகிய பாடங்களில் மாணவர் வீடுகளிலும், நிலையத்திலும் ஜீ. சீ. ஈ. சாதாரண உயர்தர மாணவர்களுக்கு தராதரமுள்ள அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் ‘டியூஷன்’ சொல்லிக் கொடுக்கப்படும். திறமையான சித்திக்கு உத்தரவாதம். யுனைடெட் இன்ஸ்டிடியூட், 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 1032

## அமோக வெற்றி

திருக்கோணமலை திங்கள்

திருமலை மக்கெய்சர் சுற்றுமதில் விளையாட்டரங்கில் நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டிகளில் சிரேஷ்ட. இடைத்தர, கனிஷ்ட பிரிவுகள் மூன்றிலுமே முதலிடத்தைப் பெற்று அமோகவெற்றியை மெதடிஸ்த பெண்கள்ஆங்கிலபாடசாலை ஈட்டியுள்ளது சிரேஷ்ட, இடைத்தர பிரிவுகளில ஸ்ரீ சண்முக வித்தியாலயம் இரண்டாவது ஸ்தானத்தையும் இப்பாடசாலையின் கனிஷ்ட பிரிவினர் 3-வது ஸ்தானத்தையும் பெற்றனர்.

## ‘ஈழநாடு’ செய்திதலைப்புப்போட்டி (8)

சென்ற வாரத்து கற்பனைச் செய்திக்கு நேயர்கள் பலர் வானத்தையும் கானத்தையும் இணைத்து தலைப்பு கொடுத்திருந்தது நாம் எதிர்பார்த்ததே. ஆகையால் சிறந்த விடையை தெரிவு செய்வது சற்றே சிரமமாகிவிட்டது.

**பரிசு பெறும் விடை**

**‘வானமழையை அழைத்த கானமழை’**

எழுதியவர்:- எஸ். ரி. சம்பந்தர், வழக்கம்பரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையாகவே ஜெயலலிதா
வைக் காதலிக்க ஆரம்பித்து

வல்லவன்
(புதிய கொப்பி)

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]

ஜெய்சங்கர்
வரலக்ஷ்மி
நடித்த

உயிரா மானமா

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்

★ சிவாஜிகணேசன் ★ பத்மினி
★ கே. ஆர். விஜயா ★ நாகேஷ்
நடித்த

திருமால் பெருமை

20-ந் திகதி முதல்

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
ராஜ் (நீர்கொழும்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)

ஆகிய திரைகளில் திரையிடப்பட இருக்கின்றது.
ஸ்ரீதரின் கதை, வசனம், டைரக்ஷனில் உருவாகி
சிவாஜி, கே. ஆர். விஜயா
முத்துராமன், கிதாஞ்சலி, பாண்டியன்
நடித்த

நெஞ்சிருக்கும் வரை

மகத்தான 3-வது வாரம்

இங்ஸ்லி (கொழும்பு) வெம்பிளி (கண்டி) ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
மற்றும் சில சினிமாஸ் திரைகளில்
காண்பிக்கப்படுகின்றது

ஜெய்சங்கர் - ஜெயலலிதா
நாகேஷ் - மனோரமா - சோ
நடித்த

பொம்மலாட்டம்

கடைசி 3 தினங்கள் மட்டும்

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) ராஜ் (நீர்கொழும்பு)
மற்றும் சினிமாஸ் திரைகளில்
★ ரவிச்சந்திரன் ★ காஞ்சனா
நடித்த

அதே கண்கள்
(ஈஸ்ட்மன் வர்ணச்சித்திரம்)


பறக்கும்.

மிதுனம்- குடும்பத்தில் பிணி, மனதிலே சுமை. அலைமோதும் வாழ்க்கை தெய்வமே துணை.

கடகம்- சொற்சிலம்பம் ஆடுவதில் மற்றவரைச் சொக்கவைப்பீர். சொகுசான நாள், இன்று மிகவும் குஷியாக இருப்பீர்.

சிம்மம்- சிந்தனைக் கணைகள் தாக்கும். சீறிவரும் கோபம். உடன்பிறந்த சோதரத்தின் உடல்நிலையும் கவலைதரும்.

கன்னி- கற்றதனால் பயன் இன்று கட்டாயம் கிட்டும். அறிஞர்கள் போற்றுவர், ஆதரவும் பெருகும்.

துலாம்- இதயத்தில் பூரிப்பு, இன்பத்தின் சாயலுடன் இல்லறமும் சிறக்கும். கரும்பு போல் இனிக்கும் காரியங்கள் உண்டு.

விருச்சிகம்- அவசரம் வேண்டாம், ஆயுத பீடைக்கு இடமுண்டு. நில், நிதானி அமைதி உன் காலடியில்.

தனுசு- வாழ்க்கைப் பூங்காவில் வசந்தம் நிலவும், சுபகருமங்கள் நடைபெறும், சுற்றமும் சூழும்.

மகரம்- பக்கத்தில் படுகுழி, பார்த்திருப்பவர் பகைவர், விழிப்புடன் இருப்பின்வெற்றிஉனதே.

கும்பம்- குருவின் ஆசியுடன், குறிக்கோளும் வெற்றி காணும். குன்றென நிமிர்ந்து நிற்பீர் குவிந்திடும் புகழும்.

மீனம்- அலைமோதும் மனத்துடன் அமைதியும் குன்றும், வலைவீசும் எதிரிகளும் காத்திருப்பர் இன்று.

— சோதிடக்கலாநிதி —

திருமலை
க. வேலுப்பிள்ளை


அனேகரின்
வேண்டுகோளுக்கிணங்க
தொடர்ந்து
காண்பிக்கப்படுகின்றது.
155- வது தினம்
ராஜா [யாழ்ப்பாணம்]
தினசரி 2-30, 6-30, 9-45.
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
மாதர்களுக்கு அரைக்கட்டணம்

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 & 9-45 P.M.
SWORD AND THE
DRAGON
(cinemascope)


செவ்வாய் 17—6—69

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அன் 61 மீ

காலை 6-30 நாதஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதம், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 49 மீ

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 கதம்பஇசை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 61 மீ

மாலை 4-30 செய்திச்சுருக்கம், 4-33 ஆங்கிலவகுப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர்மன்றம், 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 வீணை, புல்லாங்குழலிசை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கர்னாடக இசை, 7-35 பேச்சு, 7-45 நாடகம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 புல்லாங்குழலிசை, 9-30 பேச்சு, 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

சிங்கமும் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர்.

(தே. நி)

## கொக்குவில் வென்றது

கொக்குவில், ஞாயிறு

கொக்குவில் (பிரம்படி) சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் கொக்குவில் சனசமூக நிலையத்தினரும் யாழ். பொலிஸ்கோஷ்டியினருக்கும் இடையில் நடைபெற்றமென்பந்து கிரிக்கெட் போட்டியில் கொக்குவில் சனசமூக நிலையம் 66 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

கொக்குவில் கோஷ்டியினருக்கு அளித்த தேநீர் விருந்தின்போது யாழ். பொலிஸ் கோஷ்டியைச் சேர்ந்த திரு. அன்வர் சொற்பொழிவில் இத்தகைய விளையாட்டுக்களால்பொதுமக்களுக்கும் தங்களுக்குமிடையில் நல்லுறவும் நல்லுணர்வும் ஏற்படும் எனத்தெரிவித்தார்.

விளையாட்டுஅமைப்பாளர் திரு. ம. அரசநாயகம் சிங்களத்தில் ஆற்றிய சொற்பொழிவில், இவ்விளையாட்டுப் போட்டி நடத்துவதற்கு ஊக்கம் அளித்த உதவி இன்ஸ்பெக்டர் திரு. வறகொடவுக்கும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் நன்றிகூறினர்.

மொத்தகடூழியம்

அல்லைப்பிட்டி, திங்கள்

வேலணை கிழக்கைச் சேர்ந்த ஆறுமுகம் சின்னத்தம்பி என்பவரையும் அவரது மனைவியான செல்லமுத்து என்பவரையும் அதே இடத்தைச் சேர்ந்த பொன்னையா சுப்பிரமணியம் என்பவர் கத்தியால் வெட்டிப் படுகாயம் விளைவித்ததாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு ஊர்காவற்றுறை மாஜிஸ்திரேட் ஜனாப் எம். ஜமீல் முன்னிலையில் விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணைமுடிவில் நீதிபதி எதிரியைக் குற்றவாளியாக கண்டார். எதிரியான சுப்பிரமணியம் ஓர் கத்தி வெட்டு வழக்கில் ஆறுவார கடூழியச் சிறைத்தண்டனை அனுபவித்திருக்கிறார் என பொலிஸ் தரப்பில் கூறப்பட்டதைத் தொடர்ந்து மாஜிஸ்திரேட் எதிரிக்கு ஆறுமாதக் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கினர்

## பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்

யாழ்ப்பாணம், திங்கள்

புங்குடுதீவு பெரியபுலம்-ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் வண்ணை பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா பத்து நாட்கள் சங்கீத கதாப்பிரசங்கம் நிகழ்த்தினர். ஞாயிற்றுக்கிழமையன்று கதாப்பிரசங்கம் பூர்த்தியாயிற்று. அன்று கலைவாணிஅச்சக அதிபர் தலைமையில் அவர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

## நன்கொடை

அராலி, திங்கள்

அரசாங்க கலாச்சாரப் பகுதி அதிபரால் வருடா வருடம் பாடசாலை நேரமில்லாத தினங்களில், சமயசங்கங்களால் நடத்தப்பட்டு வரும் சமயபாட வகுப்புகளுக்கு அளிக்கப்பட்டுவரும் நன்கொடைப் பணம் அராலியிலுள்ள மூன்று சங்கங்களுக்கு கிடைத்துள்ளன.

இவ்வாண்டு முன்னையை விட கூடுதலான பணம் நன்கொடையாகக் கிடைத்துள்ளதென அச்சங்க காரியதரிசிகள் தெரிவித்துள்ளார்கள். இப்பணம் மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்குவதற்கே பயன்படுத்தப்படுகிறது. பரிசுகள் சமயநூல்களாகவேகொடுக்கப்படுகின்றன. திருமுறைப்பாக்கள் தேவாரப்பண், திருக்குறள், சைவசமய வினாவிடைகள், ஆகியவைகள் இவ்வகுப்புகளில் போதிக்கப்பட்டு வருகின்றன.

## 'சைவத்துக்கும் தமிழுக்கும் தம்மை அர்ப்பணித்தவர்'

உடும்பராய், திங்கள்

''இந்த நாட்டின் கல்விக்குப் பாடுபட்டவர்கள் பலர். சைவசமயத்தைப் பாதுகாக்க உழைத்தவர்கள் பலர். இவ்வாறு உழைத்தவர்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரே. அவர்களுள்முன்னணியில்நிற்பவர் சைவாசிரியகலாசாலை முன்னாள் அதிபர் திரு. சுவாமிநாதன் ஜே. பி.யே. திரு. சுவாமிநாதன் சைவத்துக்கும் தமிழுக்கும் தன்னையே அர்ப்பணித்த ஒரு பெரியவர். சைவசமய வளர்ச்சியின் பொருட்டு அவர் ஆற்றிய சேவைகள் மிகவும் பிரசித்தமானவை. சமீபகாலத்தில்நம்மிடையே வாழ்ந்த பெரியார்களுக்குள் மயிலிட்டி திரு. சுவாமிநாதன் தலைசிறந்த சைவத்தமிழ் அறிஞராவர். அவரின் ஞாபகமாக அறிஞர்கள் கருத்துரைகள் மலிந்த சுவாமிநாத மலர் மணமுள்ள ஒரு சிறந்த மலராகும், என்றும் வாடாத மலராகும்.''

சமீபத்தில் காலஞ்சென்ற சைவாசிரியகலாசாலை முன்னாள் அதிபர் திரு. சி. சுவாமிநாதன் ஞாபக வெளியீடான சுவாமிநாதமலரை வெளியீடு செய்த மாவிட்டபுரம் கந்தசுவாமிகோயில் ஆதீனகர்த்தர் பிரமஸ்ரீ சு. துரைசாமிக் குருக்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மயிலிட்டியில் உள்ள திரு. சி. சுவாமிநாதன் இல்லத்தில் நடைபெற்ற இவ் வைபவத்தை திருநெல்வேலிச் சைவாசிரியகலாசாலைப் பழைய மாணவர்கள் சார்பில் பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபைக் காரியதரிசி திரு. அ. பஞ்சாட்சரம் ஆரம்பித்துவைத்தார்.

மயிலணி சைவவித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் திரு. மா. குமாரசாமி, உரும்பராய் சைவத்தமிழ்வித்தியாசாலைஆசிரியர் திரு. இ. சரவணமுத்து (சாரதா) ஆகியோர் குறித்த சுவாமிநாத மலரிலுள்ள விஷயங்களைச் சபையோருக்கு அறிமுகம்செய்துவைத்தனர்.

செய்வது சற்றே சிரமமாகிவிட்டது.

**பரிசு பெறும் விடை**

## 'வானமழையை அழைத்த கானமழை'

எழுதியவர்:- எஸ். ரி. சம்பந்தர், வழக்கம்பரை அம்மன் கோவில், தொல்புரம், சுளிபுரம்.

**பாராட்டுக் குரியவை**

'கான மழையால் வான மழை' (ஆர். பாலன், சாவகச்சேரி), 'கானம் பிறக்க வானம் திறந்தது' (க. ஜெயராம், கிறீன் லன்டஸ், கொழும்பு-4) 'கான மழை கொட்டிட வான மழைகொட்டுது' (அ. த. சுந்தரலிங்கம், அல்வை), 'வானமழைக்கு கானமழை' (கா. வேந்தன், தும்பளை, பருத்தித்துறை)

## இந்தவாரப் போட்டி

பின்வரும் கற்பனைச் செய்திக்கு அழகான, சுருக்கமான ஒரு தலைப்பு எழுதுங்கள்.

'கங்காபுரம் என்ற சிற்றூரில் ஆக ஐம்பது குடும்பங்களே வாழ்கின்றன. இவர்களுக்கு ஒரு பள்ளிக்கூடம் இல்லாதது பெரும் குறையாக இருந்தது. கமம் செய்து பிழைக்கும் அவ்வூர் வாலிபர்கள் சிலர் ஒன்று சேர்ந்து இக்குறையை நிவர்த்தி செய்யத்தீர்மானித்தனர். கமங்களில்வேலையில்லாத சமயங்களில் அவர்கள் மரங்களை வெட்டி அறுத்து கப்புகளும் வலைகளும் சலாகைகளும் அந்து, கிடுகுகள் பின்னி, மண் குழைத்து இரண்டே இரண்டு மாதங்களில் பள்ளிக்கூடத்துக்கு ஓர் அழகான கட்டடத்தை எழுப்பி விட்டார்கள். இதை அறிந்த மாவட்ட அரசாங்க அதிபர் அவர்கள் ஆற்றிய சிரமதானத் தொண்டை பாராட்டியதுடன் பள்ளிக்கூடத்துக்கு ஒரு மானியமாக ரூபாய் இரண்டாயிரம் வழங்கும்படி சிபார்சு செய்திருக்கிறார். சமீபத்தில் கல்வி மந்திரியே நேரில் வந்து திறப்பு விழாவை நடாத்தி வைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**நிபந்தனைகள்:**

விடைகளைக் கீழ்க்காணும் கூப்பனிலேயே தெளிவாக எழுதி அனுப்பவேண்டும். விடைகள் யாவும் 21-6-69 க்கு முன் எமக்கு வந்து சேரவேண்டும். ஒருவர் எத்தனை விடைகளையும் எழுதி ஒரே உறையில் வைத்து அனுப்பலாம். அனுப்பவேண்டிய விலாசம்: **செய்தித் தலைப்புப் போட்டி (8), 'ஈழநாடு' த. பெ. இலக்கம் 49, யாழ்ப்பாணம்,** விடைகளை 'ஈழநாடு' காரியாலயத்தில் நேரடியாகவும் சமர்ப்பிக்கலாம். எல்லா விஷயங்களிலும் போட்டிக் குழுவின் தீர்ப்பே முடிவானது. போட்டி சம்பந்தமான எவ்வித கடிதப்போக்குவரத்தும் வைத்துக் கொள்ளவேண்டாம். 'ஈழநாடு' ஊழியர்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் இப்போட்டியில் கலந்துகொள்ளமுடியாது. மிகச் சிறந்த விடைக்கு ரூபா ஐந்து (5/-) பரிசுப்பணமாக வழங்கப்படும்.

'ஈழநாடு'
செய்தித்தலைப்புப் போட்டி -(8)

விடை: ..................................
..................................

பெயர்: ..................................

விலாசம்: ..................................
..................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரஞ்சு அதிபர் தேர்தலில் ஜோர்ஜ் பொம்பிடோ வெற்றி

## வெள்ளியன்று பதவிஏற்பார்

பாரிஸ், ஜூன் 16

**பிரஞ்சு அதிபர் தேர்தலில் டி கோல் ஆதரவாளரான ஜோர்ஜ் பொம்பிடோ வெற்றிபெற்றிருக்கிறார்.**

**திரு. பொம்பிடோ விடுத்துள்ள ஒரு வெற்றிச் செய்தியில் தேசிய ஒற்றுமை ஏற்படவேண்டுமென்றும் சகல பிரெஞ்சு மக்களுக்காகவும் தாம் உழைக்கப்போவதாகவும் அறிவித்துள்ளார்.**

திரு. பொம்பிடோவின் வெற்றிச் செய்தி கிடைத்ததும் அவருக்கு ஜெனரல் டி கோல் வாழ்த்துச்செய்தியொன்றை அனுப்பிவைத்தார். அவர் இப்பொழுது அயர்லாந்தில் ஓய்வெடுக்கின்றார்.

பிரெஞ்சு அதிபர் பதவிக்கான இரண்டாவது சுற்றுத் தேர்தல் நேற்று நடைபெற்றது. இருவாரங்களுக்குமுன் இடம்பெற்ற முதல் சுற்றுத் தேர்தலில் மொத்தம் 7 பேர் போட்டியிட்டார்கள். இவர்களில் திரு. ஜோர்ஜ் பொம்பிடோவும், தற்காலிக அதிபராகவிருந்த திரு. போஹியரும் பிரதான வேட்பாளர்களாகத் தெரிவானார்கள். அதைத்தொடர்ந்து நேற்று இரண்டாவது சுற்றுத்தேர்தல் நடைபெற்றது இதில் இவர்கள் இருவரும் போட்டியிட்டார்கள். கம்யூனிஸ்ட் கட்சி தமது ஆதரவாளர்களைத் தேர்தலில் கலந்துகொள்ளவேண்டாம் என்று கேட்டுக்கொண்டது.

நேற்றுத் தேர்தல் முடிவுகளின் பெரும்பகுதி வெளியாகிய போது திரு. பொம்பிடோ வெற்றிபெற்றுவிட்டதை திரு. போஹியர் ஒப்புக்கொண்டார். திரு. பொம்பிடோவுக்கு 58 சதவீதி வாக்குகளும் திரு. போஹியருக்கு 42 சதவீத வாக்குகளும் கிடைத்தன.

### வெள்ளிக்கிழமை பதவி ஏற்பு

திரு. பொம்பிடோ தமது வெற்றி பற்றி அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்ட பின்னர் வெள்ளிக்கிழமை பதவியை ஏற்றுக்கொள்வார். பிரான்ஸின் புதிய பிரதமராக திரு. ஷாபான் டென்மா என்பவரை நியமிக்கப்போவதாகவும் திரு. பொம்பிடோ அறிவித்திருக்கிறார்.

திரு. பொம்பிடோ விடுத்த ஒரு செய்தியில் திரு. டி கோல் அதிபர் தேர்தல் சம்பந்தமாக அறிமுகப்படுத்திய நேரடித் தேர்தல் முறைக்கு மக்கள் தீர்ப்பு கிடைத்திருக்கிறது என்று கூறியுள்ளார்.

ஜெனரல் டி கோல் 1965ம் ஆண்டில் அதிபராகத் தெரிவுசெய்யப்பட்டபொழுது கிடைத்த பெரும்பான்மை வாக்குகளைவிட அதிகமான பெரும்பான்மை வாக்குகள் திரு பொம்பிடோவுக்குக்கிடைத்திருக்கின்றன

1870-ம் ஆண்டுக்குப் பின்னர் தெரிவுசெய்யப்பட்ட 19-து அதிபராவார் திரு. பொம்பிடோ. இவர் ஏழு ஆண்டுகள் அதிபராக இருப்பார்.

### ஆசிரியர் குடும்பம்

திரு. ஜோர்ஜ் பொம்பிடோ ஓர் ஆசிரியர் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவரும் ஆரம்பத்தில் ஓர் ஆசிரியராகவே இருந்துள்ளார். 1962 ல் அவர் பிரான்சின் பிரதமரானார். சுமார் ஓராண்டுக்கு முன்னர் ஜெனரல் டி கோல் அவரைப் பிரதமர் பதவியிலிருந்து விலக்க நேர்ந்தது. பிரான்சில் ஏற்பட்ட மாணவர் குழப்பங்களே இதற்கு அடிப்படைக் காரணங்களாக அமைந்தன. டி கோல் தமது வாரிசாக திரு. பொம்பிடோவையே அதிபர் பதவிக்கு நிற்க வேண்டும் என்றும் அப்போது விருப்பம் தெரிவித்திருந்தார்.

அரசியல் சீர்திருத்தங்கள் சம்பந்தமாக ஜெயபிரகாஸ் நடத்திய பொதுசன வாக்கெடுப்பில் அவர் திட்டத்தை மக்கள் ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டதால் ஏற்கனவே கொடுத்திருந்த ஒரு வாக்குறுதியின்படி அவர் டிகால் பதவியை விட்டு விலகினார். அதைத் தொடர்ந்து புதிய அதிபர் தேர்தல் நடைபெற்றது..

இதில் வெற்றி பெற்றுள்ள முன்னாள் பிரதமர் ஜோர்ஜ் பொம்பிடோவுக்கு இப்பொழுது 57 வயதாகிறது.

### பிரஞ்சு அதிபரின் அதிகாரங்கள்

பிரஞ்சு அரசியல் அமைப்பின் படி நாட்டின் அரசியல் அமைப்பின்படி நாட்டின் அரசியல் நிர்வாகத்துக்கு அதிபராகத் தெரிவு செய்யப் படுபவரே பொறுப்பாக இருப்பார். தேசிய சட்டசபையும் செனட் சபையும் நாட்டின் ஆட்சி மன்றங்களாகும். அதிபர் தேர்தல் முன்னர் எல்லாம் தேர்தல் சபைகள் மூலமே நடைபெறும். ஆனால் 1962-ம் ஆண்டு அக்டோபர் 28-ம் திகதி பிரஞ்சு மக்கள் பொதுசன வாக்கெடுப்பின் மூலம் ஏற்றுக் கொண்ட அரசியல் திட்ட மாற்றம் ஒன்றின்படி எதிர்காலத்தில் நேரடியாகவே அதிபர் தெரிவு நடைபெற வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

ஏழு ஆண்டுகளுக்கு தனியாக இருக்கும் அதிபரே நாட்டின் பிரதம மந்திரியையும் நியமிப்பார். அதிபர் விரும்பினால் சட்டசபையைக் கலைத்து விட்டு புதிய தேர்தல் நடத்தலாம்.

முக்கிய பிரச்னைகளின்மீது பொதுசன வாக்கெடுப்புகளை அதிபர் நடத்துவார். தேசிய நெருக்கடிகள் ஏற்படும் போது அதிபர் முழு அதிகாரங்களையும் பொறுப்பேற்றுக் கொள்வார். அரசாங்கம் வீழ்த்தப் படுவதானால் மிகப்பெரும் பான்மை பலத்துடன் சட்ட சபை தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். பிரதம மந்திரி, ராஜ்யங்களின் தலைவர்கள். சில மந்திரிகள் ஆகியோரைக் கொண்ட நிர்வாக சபை அதிபருக்கு உதவியாக இருக்கும்.

### டிகோல் கடித மூலம் வாக்களித்தார்

பாரிஸ், ஜூன் 16

பிரான்ஸ் ஜனாதிபதித் தேர்தலுக்கான இறுதிக்கட்ட வாக்களிப்பில் பிரான்ஸ் ஜனாதிபதி அயர்லந்தில் இருந்துகொண்டு கடித மூலம் தனது வாக்கை அளித்துள்ளார்.

நேற்றிரவு வாக்களிப்பு நிலையம் ஒன்றுக்குள் புகுந்த அராஜகவாதிகள் சிலர் அங்குள்ள விளம்பரத் தாள்கள் சிலவற்றைக் கிழித்துக் கலகம் செய்துள்ளதோடு, வாக்குச்சீட்டுப் பெட்டியையும் தூக்கிச் சேற்றில் வீசினராம்.

மேலும் வட பிரான்ஸில் உள்ள வாக்களிப்பு நிலையம் ஒன்றுக்கு எறிகுண்டு ஒன்று வீசப்பட்டதாகவும், ஆனால் பலத்த சேதமெதுவும் ஏற்படவில்லையென்றும் அறிவிக்கப்பட்டது.

### கூரை சரிந்து விழுந்ததில் 60 பேர் பலி

மாட்ரிட், ஜூன் 16

ஸ்பெயினில் புதிய கட்டிடம் ஒன்றின் கூரை சரிந்து விழுந்ததின் காரணமாக 60 பேர் பலியானார்கள். மாட்ரிட் நகருக்குச் சுமார் 40 மைல் தொலைவில் இந்த விபத்து நடைபெற்றது. புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விடுதிச்சாலை ஒன்றின் கூரை சரிந்து விழுந்தபொழுது அதனுள் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் உட்பட ஏராளமானவர்கள் அகப்பட்டுக்கொண்டனர்.

### ''மாணவர் முன்னேற வழி

அராலி, திங்கள்

''ஒரு கிராமத்தில் மகாவித்தியாலயமிருக்க அதைப் புறக்கணித்துத் தமது பிள்ளைகளை அயல் கிராமங்களிலுள்ள வித்தியாலயங்களில் சேர்க்கப் பல பெற்றோர் விரும்புவதினால்தான் மாணவர் பின்தங்கிய நிலையை அடைகிறார்கள். உள்ளூர்ப் [illegible]

### தமிழ் வாலிபர்களுக்கு ஜி. ஜி. வேண்டுகோள்

அளவெட்டி, திங்கள்

விசுவமடு விவசாயப் படையிலுள்ள 100 வெற்றிடங்களிலும் தமிழ் வாலிபர்களே உடனே சேருங்கள் இல்லாவிட்டால் சிங்கள இளைஞர்களால் அவ்வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுவிடும்'' என வேண்டுகோள் விடுத்துள்ளார் யாழ்ப்பாணம் எம், பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்.

தமிழ்காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. ஜி, ஜி. பொன்னம்பலம் விடுத்துள்ள இவ் வேண்டுகோளில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

விசுவமடு விவசாயப் படையில் இப்போது 100 வெற்றிடங்கள் உண்டு. இந்த இடங்களில் இம்மாதம் 18-ம் திகதி வரைதான் தமிழ் இளைஞர்கள் சேரலாம். இப்போது நீங்கள் அரசாங்கக் கட்சி பாராளுமன்றக்குழு பிரதிநிதிகளின் சிபார்சுடனே விரைந்து விவசாயப்படையில் சேர்ந்து, வடக்கிலும் சிங்கள இளைஞர் வருவதை தடுப்பது உங்கள் கடமை என்பதை உணருங்கள்.

மத்திய மாகாணத்தில் உள்ள விவசாயப்படையில் போதியளவு சிங்கள இளைஞர்கள் சேர்க்கப்பட்டாலும் மேலும் சேரப்போகிறோம் என அவர்கள் கேட்கிறார்கள். இதேநேரத்தில் நாம் விவசாயப்படையில் சேராவிட்டால், எதிர்காலத்தில் வேலையில்லையே எனப் பரிதாபப்படவேண்டிய நிலை ஏற்படும். எனவே தமிழ் இளைஞர்களே கட்டாயம் சேருங்கள்.

### திருவிழா

ஊர்காவற்றுறை, திங்கள்

'கணபதீஸ்வரம்' என அழைக்கப்படும் கரம்பொன் சிவன்கோவில் வருடாந்த உற்சவம் சென்ற சனிக்கிழமை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இம்மாதம் 22-ந் திகதி நடைபெறும் தேர்த் திருவிழாவையடுத்து தீர்த்த விழா, பூங்காவனம் என்பன நடைபெறும். 25-ந் திகதி காலை கும்பாபிஷேகதின சங்காபிஷேகம் நடைபெறவும் ஏற்பாடாகியுள்ளது.

புளியங்கூடல் மகாமாரி அம்பாள் ஆலய தேர்த்திருவிழா சென்ற சனிக்கிழமை நடைபெற்றது. தீவுப் பகுதியின் பல பாகங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான அடியார்கள் கலந்துகொண்டனர்.

### போராட்டம்மூலமே ஆசிரியர் உரிமைபெறலாம்'

நல்லூர் திங்கள்

''ஆசிரியர்களை ஏனைய அரசாங்க உத்தியோகத்தர்களைப் போலப் பாவித்து அரசியல்வாதிகளின் விருப்பத்திற்கும் பொலிசாரின் பிழையான தகவல்களின் பேரிலும் அதிகாரிகளின் எதேச்சாதிகாரப் போக்கிற்கும் இணங்க இடமாற்றம் செய்வதும் தண்டனை வழங்குவதும் மாணவ சமுதாயத்திற்கும் நாட்டின் கல்வி அபிவிருத்திக்கும் பெரும் பங்கம் விளைவிப்பதாகும்.''

இவ்வாறு ஸ்ரீலங்கா ஜாதிக குருசங்கத்தின் வட கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில், சங்கத் தலைவர் திரு. வ: கிருஷ்ண பிள்ளை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;-

ஆசிரியர்கள் ஏனைய அரசாங்க ஊழியர்களுடனும் தொழிலாளர்கள் விவசாயிகள் பொதுமக்கள் ஆகியோ [illegible]

...கள்- திருவாளர்கள் கே. சபாரத்தினம், பொ. செல்வரத்தினம், செயலாளர்- திரு. எம். குமாரசாமி, பொருளாளர்- ஜி. திருச்செல்வம். பதின்மூன்று பேரடங்கிய ஓர் காரியக்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

### புதிய சங்கம்

அல்லைப்பிட்டி, திங்கள்

தீவுப்பகுதியிலுள்ள சகல மத்திய மகாவித்தியாலயங்கள் மகாவித்தியாலயங்கள், தனியார்துறைப் பாடசாலைகள் ஆகியவற்றினை ஒன்று சேர்த்து ''தீவுப்பகுதிப் பாடசாலைகள் விளையாட்டுக் கழகம் என்ற பெயரில் புதிய விளையாட்டுச் சங்கமொன்று ஊர்காவற்றுறைப் புனித அந்தோனியார்கல்லூரி அதிபர் வணக்கத்துக்குரிய பிதா எப். ஜே. ஸ்ரனிஸ்லோஸ் தலைமையில் அங்குரார்ப்ப...

### கலைவிழா

ஊர்காவற்றுறை, திங்கள்

புங்குடுதீவு வித்தியாலய ஆசிரியர் சங்க ஆதரவில் புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையில் கலைவிழா நடைபெற்றது.

தீவுப்பகுதி வட்டார வித்தியாதரிசி திரு. சி. நல்லையா விழாவிற்குத் தலைமை வகித்தார். புங்குடுதீவைச் சேர்ந்த பன்னிரண்டு வித்தியாலயங்கள் கலைவிழாவில் கலந்துகொண்டன.

ஊர்காவற்றுறை வட்டார கலைவிழாப் போட்டிக்குப் பின்வரும் பாடசாலைகள் தேர்ந்தெடுக்கப் பட்டன.

கோலாட்டம்- ஸ்ரீகணேச வித்தியாலயம், பாட்டு- மகாவித்தியாலயம்-நாடகம் ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலை- கும்மி. ஸ்ரீகணேசவித்தியாலயம்- நடனம் இறுப்பிட்டி அ. மி. பாடசாலை, பெருங்காடு அ. மி. பாடசாலை.

### கசிப்புக்கடத்தல் பிடிபட்டது

#### ரூபா 1000 அபராதம்

மீதோட்டமுல்லை திங்கள்

வேகமாகக் கார் ஓட்டி வந்த சாரதி பொலிசாரைக் கண்டதும் திடீரெனக் காரைநிறுத்தி ஓட்டம் பிடித்தார். சந்தேகம் கொண்ட பொலிசார் அவரைத் துரத்திப்பிடித்தனர். இச்சம்பவம் கொழும்பு ஊறுகொடவத்தைச் சந்தியில் நடைபெற்றது

மேலும் காரைச் சோதனை போட்ட பொலிசார் 348 கசிப்புப் போத்தல்களைக் காரினுள் கண்டுபிடித்தனர். ஜாஎலையிலிருந்து கொழும்புக்கு வந்த இக்காரின் சாரதியான ஆர். பி. பிரேமரத்ன என்னும் சாரதியைத் தெமட்டக்கொடைப் பொலிசார் கைது செய்து மருதானை மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

திரு. ஆர். பி. பிரேமரத்தினவைக் கடத்தல் குற்றவாளியாகக் கண்ட மாஜிஸ்திரேட் ரூபா 1000 அபராதம் விதித்தார். (வி. நி.)

### பஸ்ஸில் பணம் அபேஸ்

#### பறிகொடுத்தவர் சாரதி

மீதோட்டமுல்லை, திங்கள்

பஸ்சில் வேலைசெய்து உழைத்த சம்பளப் பணத்தை பஸ்சிலேயே பறிகொடுத்தார்...

### இந்தியாவில்

### வரவேற்க ஏற்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக அறிவிக்கப்பட்ட பின்னர் வெள்ளிக்கிழமை பதவியை ஏற்றுக்கொள்வார். பிரான்ஸின் புதிய

ண்டுக்கு முன்னர் ஜெனரல் டி கோல் அவரைப் பிரதமர் பதவியிலிருந்து விலக்க நேர்ந்தது. பிரான்சில் ஏற்

தேசிய சட்டசபையும் செனட் சபையும் நாட்டின் ஆட்சி மன்றங்களாகும். அதிபர் தேர்தல் முன்

உட்பட ஏராளமானவர்கள் அகப்பட்டுக்கொண்டனர்.

"ஒரு கிராமத்தில் மகா வித்தியாலயமிருக்க அதைப் புறக்கணித்துத் தமது பிள்ளைகளை அயல் கிராமங்களிலுள்ள வித்தியாலயங்களில் சேர்க்கப் பல பெற்ருேர் விரும்புவதினுல்தான் மாணவர் பின்தங்கிய நிலையை அடைகிருர்கள். உள்ளூர்ப் பாடசாலையில் பிள்ளைகள் படிப்பதால், பாடசாலை நேரங்களில் ஆசிரியர்களினதும், மற்றைய நேரங்களில் பெற்ருேரினதும் கண்காணிப்பில் இருப்பார்கள். வெளியே விடுவதால் பிள்ளைகளுக்கும் அதிகமான சுதந்திரம் கொடுக்கப்படுகின்றது. இதனுல் பிள்ளைகளின் வீட்டு வேலைகள் பாதிக்கப்படுவதுமல்லாமல் அவர்கள் பொறுப்பற்ற நிலையிலும் நடந்து கொள்கின்ருர்கள்."

வட்டுக்கோட்டை எம்.பி. திரு. அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்ற அராலி சரஸ்வதி வித்தியாசாலைப் புதிய கட்டடத் திறப்பு விழாவில் கலந்து உரையாற்றிய திரு. வே. வி. மூர்த்தி கூறினுர்.

பொதுக்கூட்டத்தில், சங்கத் தலைவர் திரு. வ: கிருஷ்ண பிள்ளை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;-

ஆசிரியர்கள் ஏனைய அரசாங்க ஊழியர்களுடனும் தொழிலாளர்கள் விவசாயிகள் பொதுமக்கள் ஆகியோருடனும் விலகாது ஒன்றிணைந்து கிளர்ச்சி செய்வதன்மூலமே தமது உரிமைகளைப் பெறமுடியும். வெறும் கோரிக்கைகளை மட்டும் உச்சரித்துவிட்டு செயலற்றிருப்பதால் நாம் எமது உரிமைகளை வென்றெடுக்க முடியாது. ஆகவே ஏனைய தொழிலாளர்களின் போராட்டத்திற்கு நாமும் உறுதுணையாக நின்று ஒத்துழைத்து ஒரு பரந்த ஐக்கியத்தை உருவாக்கும் காலம் நெருங்கிவிட்டது.

இம்மாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்- திரு. வ. கிருஷ்ணபிள்ளை, உபதலைவர்

பாடசாலைகள் விளையாட்டுக் கழகம் என்ற பெயரில் புதிய விளையாட்டுச் சங்கமொன்று ஊர்காவற்றுறைப் புனித அந்தோனியார்கல்லூரி அதிபர் வணக்கத்துக்குரிய பிதா எப். ஜே. ஸ்ரனிஸ்லோஸ் தலைமையில் அங்குரார்ப்பணம்செய்துவைக்கப்பட்டது

0 0 0

## இந்தியாவில்
# தீண்டாமையை ஒழிக்க தீவிர முயற்சி

புதுடில்லி, ஜூன் 16

இந்தியாவில் தீண்டாமையை முற்ருக ஒழிக்கும் விதத்தில் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தைத் தீவிரமாக அமுல் நடத்தும்படி உள்துறை அமைச்சு மாநில அரசுகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

சட்டத்தின் ஷரத்துக்களை மாஜிஸ்திரேட்டுகளும் பொலிசாரும் நன்கு புரிந்து கொள்ளும்படி செய்ய வேண்டுமென்று தீண்டாமை பற்றிய புகார்கள் குறித்து தீவிரமான புலன் விசாரணைகள் நடத்த வேண்டும் என்றும் உள்துறைஅமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மேற்பார்வை அதிகாரிகள் கிராமங்களுக்குச் செல்லும் பொழுது அங்கு சமூகக் குறைபாடுகள் பற்றியதகவல்களை அறிந்து கொள்ளவேண்டுமென்றும் வழக்குகள் நடைபெறும் போது பிழைகள் ஏற்பட்டால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீண்டாமை ஒழிப்புச் சட்டம் முறையாகவும் தீவிரமாகவும் அமுல் நடத்தப்படுவதில்லை யென்றுபிரதம மந்திரிக்கும் உள்துறை அமைச்சுக்கும் ஏராளமான புகார்கள் வந்து குவிந்துள்ளதாக உள்துறை அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

## திாப்பு ஒத்திவைப்பு

வல்வெட்டித்துறை, திங்கள்

டொன் சேதுடு என்பவர் கரணவாயைச் சேர்ந்த சின்னத்துரை பராபரன் என்னும் சிறுவனை கடந்தவருடம் ஐப்பசி மாதம் 28-ந் திகதி பருத்தித்துறை யாழ்ப்பாணம் பிரதானவீதி மூத்தநயினர் கோவிலடி என்னுமிடத்தில் வாகனத்தால் மோதிக் காயம் விளைவித்ததாகப் பொலிசாரால் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் எதிரியை குற்றவாளியாகக் கண்டு தீர்ப்புக் கூறுவதை வேருெரு திகதிக்கு ஒத்தி வைத்துள்ளார்.

## வரவேற்க ஏற்பாடு

ஊர்காவற்றுறை திங்கள்

இம்மாதம் 27-ந் திகதி காரைநகரிலும் 28-ம் திகதி ஊர்காவற்றுறையிலும்நாவலர் சிலைக்கு வரவேற்பளிக்க காரைநகர் ஊர்காவற்றுறை மக்கள் தீர்மானித்துள்ளனர்.

நாவலர் சிலை வரவேற்பு வைபவத்தை யொட்டி விசேஷ இசை நிகழ்ச்சிகள் தோத்திரப்பாடல்கள் பஜனைகள் என்பன நடைபெறவும் ஏற்பாடாகியுள்ளது, தீவுப்பகுதி காரியாதிகாரி திரு. சொ. விநாயகலிங்கம் இதற்கான ஒழுங்குகளைக் கவனித்து வருகிருர்.

## புங்குடுதீவில் சுகாதாரவிழா

ஊர்காவற்றுறை, திங்கள்

புங்குடுதீவு சுகாதார பரிசோதகர் பிரிவுக்கான சுகாதார விழா புங்குடுதீவு மகா வித்தியால திறந்தவெளியரங்கில் நடைபெற்றது.

வழக்கறிஞர் திரு. ப. கதிரவேலு விழாவுக்குத் தலைமை வகித்தார். புங்குடுதீவு பத்தாம் வட்டாரவாசிகளான ஆரோக்கியமான கர்ப்பஸ்திரி ஒருவருக்கும், ஆரோக்கியமான குழந்தை ஒன்றுக்கும் இவ்விழாவில் பரிசளிக்கப்பட்டது. ஊர்காவற்றுறை உதவி டாக்டர் திருமதி செங்கமலம் தெய்வேந்திரன் பரிசுகளை வழங்கினுர்.

திரு. பூராசா, கி. ச. அங்கத்தவர் திரு. கே வைத்தியநாதன், சுகாதார போதனுசிரியர் திரு. வைத்தீஸ்வரன் உட்பட வேறுசிலரும் பேசினர்.

கணேச வித்தியாலய மாணவர்களின் தேகப் பயிற்சி, சுப்பிரமணிய வித்தியாலய மாணவர்களின் நாடகம், மகாவித்தியாலய மாணவர்கள் பாட்டு, அ. மி. பாடசாலை மாணவிகளின் நடனம் என்பன இவ்விழாவில் இடம் பெற்றன.

ஈற்றில்சுகாதார இலவசப் படக்காட்சியுடன் விழா முற்றுப்பெற்றது.

## சிங்கள ஆசிரியர் வேண்டுமாம்

பம்பலப்பிட்டி, திங்கள்

அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபையின் கொழும்புக் கிளைக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது திரு. ஏ. கதிரவேலு பேசுகையில் வடமாகாணத்தில் ஒடுக்கப்பட்ட மாணவர்கள் கல்வி கற்கும் எல்லாப் பாடசாலைகளுக்கும் சிங்கள ஆசிரியர்களை அனுப்பிச் சிங்களம் படிப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்தவேண்டுமென்று கூறினுர்.

திரு வ. நவரத்தினராஜா பேசுகையில் இலங்கை பூராவும் பெற்ருேர் விரும்பிய மொழியே போதனுமொழியாக இருக்கவேண்டுமென்று வலியுறுத்திஞர். திரு. எஸ். சிங்கநாயகம் தலைமையில் கூட்டம் நடந்தது.

## மறைந்த ஆசிரியருக்கு அனுதாப

ஊர்காவற்றுறை, திங்கள்

காலஞ்சென்ற ஓய்வு பெற்ற தலைமைஆசிரியரும், சமய சமூகத் தொண்டருமான திரு. க. செல்லத்துரையின் மறைவு குறித்து அன்ஞரது இல்லத்தில் அனுதாபக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

தீவுப்பகுதி எம். பி. திரு. நவரத்தினம் முதலில் பேசுகையில் அமரர் செல்லத்துரை ஆசிரியர் புங்குடுதீவு கணேசவித்தியாசாலையின் வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டு உழைத்தவர் எனக் குறிப்பிட்டார்.

அடுத்துப்பேசிய கிளிநொச்சி எம்.பி. திரு. க. பொ. இரத்தினம் அன்பும் பண்பும் நிரம்பிய ஒரு சமூகத் தொண்டரை சமூகம் இழந்து விட்டமை குறித்து வருத்தம் தெரிவித்தார்.

வழக்கறிஞர் திரு. என். ரி சிவஞானம் உரைநிகழ்த்துகையில் அமரர்செல்லத்துரை உபாத்தியாயர், காலஞ்சென்ற அமரர் பசுபதிப்பிள்ளை அவர்களின் அடிச்சுவட்டைப்பின்பற்றி நூளெல்லாம்நற்ருெண்டு செய்து வாழ்ந்தவர் என்ருர்.

வித்துவான் சி. ஆறுமுகம் பண்டிதர் வி. ஆறுமுகம், பிரசித்த நொத்தாரிஸ் திரு. சபாபதிப்பிள்ளை, வித்துவான் பொன். கனகசபை ஆகியோரும் மறைந்த ஆசிரியரின் சிறப்பியல்புகள் குறித்துப்பேசினர்

## புதிய உறுப்பினர்

அல்லைப்பிட்டி, திங்கள்

வேலணை - சரவணை பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர் நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். தலைவர்: திரு. எஸ். திருநாவுக்கரசு, உபதலைவர்: திரு. ஏ. பி சண்முகநாதன், காரியதரிசி: திரு. எம் இராசையா பன்னிரண்டு பேர்கொண்ட நிர்வாகசபையொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## அபேஸ்
## பறிகொடுத்தவர் சாரதி

மீதோட்டமுல்லை, திங்கள்

பஸ்சில் வேலைசெய்து உழைத்த சம்பளப் பணத்தை பஸ்சிலேயே பறிகொடுத்தார் ஒருபஸ்சாரதி. இச் சம்பவம் அங்கொடையில் இருந்து வெல்லம்பிட்டிக்கு வந்துகொண்டிருந்த பஸ்சில் நடைபெற்றது,

சம்பளம் எடுத்துக் கொண்டு தனது அறைக்கு சென்றுகொண்டிருந்த ஒரு தமிழ் இ. போ. ச. சாரதியிடம் சுமார் 250 ரூபா பணமும் அவரின் அடையாள அட்டைகளும் முக்கிய தஸ்தாவேஜுகளும் பஸ்சில் பிக்பக்கட் அடிக்கப்பட்டுவிட்டதாகவும் ஊருக்குச் செல்ல பணமின்றிப் பரிதாபமாக நின்ற இவருக்கு நண்பர்கள் பணம் கொடுத்ததாகவும் கூறப்படுகிறது.

(வி. நி

## விவசாய உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கைகள்
### திருநெல்வேலி ப. கூ. ச. தீர்மானம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

விவசாய உற்பத்தியாளரின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாஜம் நீர் இறைக்கும் யந்தி விநியோகத்தைத் துரிதப்படுத்த வகைசெய்தல் வேண்டுமெனவும் யாழ் கூட்டுறவு மாகாணவங்கி சங்கங்களுக்குச் செய்யும் தனது நாளாந்த வேலையைத் துரிதப்படுத்தும் முகமாக நவீனமுறைகளைக் கையாண்டும், சிப்பந்திகளைக் கூட்டியும் நேரத்தைச் சுருக்க வசதி செய்ய வேண்டுமென கோரும் தீர்மானம் திருநெல்வேலி பலநோக்கக் கூட்டுறவுச் சங்கத்தின் இருபத்தைந்தாமாண்டு வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.

சங்கத்தலைவர் திரு. என். குமாரசாமி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வடபகுதி ஐக்கிய மேற்பார்வை சபைத் தலைவர் திரு, இ. இராசரத்தினம், பரிசோதகர் திரு. சி. நாகலிங்கம் ஆகியோரும் கூட்டத்திற்குச் சமூகம் கொடுத்திருந்தனர்.

ஊழியர் பிணைப்பணத்தை சங்கச் சேமிப்புத் திட்டத்தில் சேர்த்து அதற்கு 12 வீதம் வட்டி கொடுத்தல், வெளிநாடுகளில் கல்வி கற்பது அவசர தேவைகளுக்கு உதவுவது சங்கத் தொழிற்பரப்பிலுள்ளபொற்பதி டிப்போவையும், அருகாமையிலுள்ள கோண்டாவில் நாகபூஷணி டிப்போவையும் திருநெல்வேலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கமே எடுத்து நடத்துவதென்ற தீர்மானங்கள் உட்படப்பத்துத் தீர்மானங்கள் இங்கு நிறைவேற்றப்பட்டன. (கா. நி.)

## ச. ச. நிலைய புதிய கட்டிடம்

ஊர்காவற்றுறை, திங்கள்

எழுவைதீவு சனசமூக நிலையத்தின் புதிய கட்டிடத்தை எழுவைதீவு கி. ச. தலைவர் திரு எஸ். வைத்தியலிங்கம் திறந்து வைத்தார்.

## கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்வாய்

கப்புது உபதபால் கந்தோர் நிறுவப்பட்டுப் பல வருடங்களுக்கு மேலாகியும் இத்தபால் கந்தோருக்கு தொலைபேசி இணைப்பு வழங்கப்படாததால் பொதுமக்கள் பெரிதும் கஷ்டமடைய வேண்டியுள்ளதாம்.

இத்தபால் கந்தோருக்கு தொலைபேசி வசதி செய்து தரும்படி கப்புது அந்தணத்திடல் சனசமூக நிலையம் உடுப்பிட்டி எம். பி. யையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் கோரியுள்ளது.

## நிலைய ஆண்டு விழா

மன்னர், திங்கள்

எள்ளுப்பிட்டி சனசமூக நிலைய ஆண்டுவிழா மாந்தை தெற்கு கிராமசபை தலைவர் திரு. பி. பறுஞந்து தலைமையில் நடைபெற்றது மன்னர் எம். பி. திரு. வி அழகக்கோன் வண பிதா ஜெபநேசன், மன்னர் உள்ளூராட்சிஉதவி ஆணையாளர் திரு. டின்போத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தள்ளாடி அந்தோனியார் உற்சவம்

யாழ்ப்பாணம், திங்கள்

மன்னர்-தள்ளாடி புனித அந்தோனியார் திருநாள் நேற்று முன்தினம் திருச்சொருபச் சுற்றுப்பிரகாரத்துடன் முடிவடைந்தது.

கள்ளக்குடியேற்றத் தடுப்பியக்கத்தைச் சேர்ந்த இராணுவத்தினர் யாத்திரிகர்களுக்கு இரவும் பகலும் தண்ணீர் விநியோகஞ்செய்தனர்.

# திருமலை நகரம் விரைவில் நவீனமயமாகும்
## தூதுக்குழுவிடம் அமைச்சர் தகவல்

திருக்கோணமலை, திங்கள்

திருக்கோணமலை வரியிறுப்பாளர்சங்கம்உள்ளூராட்சியமைச்சர் திருஆர். பிரேமதாசாவைச் சந்தித்து தமது குறைபாடுகளை விளக்கினர்.

திருக்கோணமலையைப் பொறுத்தமட்டில் பட்டின அபிவிருத்திக்கான ஒரு திட்ட அமைப்புப்படம் உடனடியாகத் தேவையென்றும் இந்தப் பட்டினத்தை சுற்றிப்பார்த்த அளவில் இங்கு ஒரு நவீன பஸ்தரிப்பு நிலையம் இல்லாதது ஒன்றுதான் குறையாக இருக்கவில்லையென்றும் எத்தனையோ அபிவிருத்தி வேலைகள் செய்யப்பட வேண்டியிருப்பதை தாம் உணர்ந்ததாகவும், இந்த நகரத்தை அழகுபடுத்தி உல்லாசப் பிரயாணிகளின் கருத்தைக் கவரச் செய்யவேண்டும்என்பதே அரசாங்கத்தின் நோக்கமென்றும் இத்தனைக்கும் வரியிறுப்பாளர் சங்கத்தில் பதவிகள் வகிப்பவர்கள் உடனடியாக இந்தப் பட்டின அபிவிருத்திக்கான படம் ஒன்றை ஆக்குவித்துத் தமது அமைச்சிடம் ஒப்படைக்கும்படி வற்புறுத்துமாறும் பின்னர் நவீன பஸ்தரிப்பு நிலையம் மட்டுமன்றி நகரமே அழகு ஜொலிகக காணப்படுமென்றும்அமைச்சர் தம்மைச் சந்தித்தவர்களிடம் தெரிவித்தார்.

திருக்கோணமலை நகரத்திலுள்ள வட்டாரங்களைக் கூட்டி அமைப்பதற்காக ஆணைக்குழு ஒன்றை நியமித்து பொதுமக்களிடமிருந்து சாட்சியங்கள் பதிவு செய்யவேண்டுமென்றும் நீர் விநியோகம் பற்றியும் தாம் ஆவன செய்வதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

வழக்கறிஞர் திரு. ஜே. ஏ. பி. துரைநாயகம் தலைமையில் வழக்கறிஞர் திரு ஆர். சந்திரபாலன், திரு. ந. யத்தீஸ்பரன்யாவர் ஆகியோர் தூதுக்குழுவில்இடம் பெற்றனர்.

## பஸ்ஸுக்கு மெக்கானிக்பலி
### டிப்போவில் நடந்தது

மீதோட்டமுல்லை, திங்கள்

கொழும்பு மீதோட்டமுல்லை டிப்போவைச் சேர்ந்த மெக்கானிக் ஒருவர்டிப்போவில் பஸ்ஸுக்குள் அகப்பட்டு மரணமாஞர். பழுதுபார்க்கப்பட்ட பஸ்களை டிப்போவில் ஒழுங்கு படுத்தும் போதே இச் சம்பவம்நடைபெற்றது. நசிபட்ட நிலையில் பரிதாபமாக கொழும்பு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட திரு. அமீர் என்னும் மெக்கானிக் ஆஸ்பத்திரியிலேயே மரணமாஞர். இந்த டிப்போவில் இதுபோன்றுஇதுவரைமூவர் மரணமடைந்துள்ளதாகத் தெரியவருகிறது. (வி. நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாசகம்

தனிப்பட்ட மனிதன் தனது சுதந்திரத்திற்காக அரசாங்க சட்டத்திட்டம் அடிபணியத்தான் வேண்டும். — மகாத்மா காந்தி

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna Telephone: 3

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஆனி மீ 3 ந் திகதி (17 6 69)

# சீனாவை அணு ஆயுதங்களால் ரஷ்யா தாக்க முடியுமாம்

லண்டன், ஜூன் 16

சீனாவின் சிங்கியாங் மாகாணத்தை ரஷ்யாவின் அணு ஆயுதங்களான ஏவுகணைகள் தாக்கமுடியும். ரஷ்யாவின் இத்தகைய சக்திவாய்ந்த 300 ஏவுகணைகள் மங்கோலியாவில் நிறுவப்பட்டுள்ளன. அவை சிக்கியாங்கில் உள்ள சீனாவின் அணுஆயுத நிறுவனங்களைக் குறிவைத்து நிறுவப்பட்டிருப்பதாக இங்கு பிரிட்டிஷ் ராணுவ வட்டாரங்களில் கூறப்படுகிறது.

அத்துடன் ரஷ்யர்கள் தூரகிழக்கில், குறிப்பாக சைபீரியாவில் படைத்தளத்தை விஸ்தரித்து வருகின்றனர்.

மா-சே-துங் அரசு ரஷ்யா மீது தாக்குதல்களை ஆரம்பிப்பதற்குத் துணியாமல் இருப்பதற்சாகாகவே முக்கியமாக ரஷ்யர்கள் தூரகிழக்கில் தமது பாதுகாப்பைப்பலப்படுத்தி வருவதாக கம்யூனிஸ்ட் வட்டாரங்களிலிருந்து தகவல்கள் கிடைத்திருக்கின்றன. சீனாவின் ஆக்கிரமிப்புப் போக்கை முறியடிப்பதற்கு ரஷ்யர்கள் உறுதிகொண்டிருக்கின்றனர்.

சோவியத் மங்கோலியா ராணுவ ஒப்பந்த படியே, மங்கோலியாவில் சோவியத் ராக்கெட்டுகள் நிறுவப்பட்டிருக்கின்றன. சோவியத் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் பிரஸ்னெவ் 1966 ஜனவரி மாதத்தில் மங்கோலியா தலைநகரில் மங்கோலியா-சோவியத் ராணுவ ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த சோவியத் ரக்கெட்டுகள் ஆள், சஞ்சாரம் சிறிதும் இல்லாத இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. அவற்றை ரஷ்யர்களே இயக்குகின்றனர். விசேஷமாக அமைக்கப்பட்ட சாலைகள் மூலமாக அவர்களுக்குச் சப்ளைகள் அனுப்பப்படுகின்றன.

ராணுவப் பேச்சுக்களைத் தொடர்ந்து நடத்துவதற்காக சோவியத் ஜனாதிபதி போட்கார்னி சென்ற மாதத்தில் மங்கோலியாவுக்கு விஜயம் செய்தார் என்பதுகுறிப்பிடத்தக்கது.

சீனாவின் அணு ஆயுதங்கள் வைக்கப்பட்டுள்ள சிங்கியா, மாகாணம் மங்கோலியாவுக்கு மிக அருகில் இருக்கிறது அதனால்தான் சோவியத் ஏவுகணைகள் மங்கோலியாவில் நிறுவப்பட்டுள்ளன. சிங்கியாங் மாகாணத்தில் சீனாவின் அணு ஆயுதங்கள் இருப்பதுடன், உரேனியம் சுரங்கங்களும் இருக்கின்றன

சீனாவின் முக்கியமான தொழிற்சாலை ஏராளமாகக் குவிந்திருக்கும் மஞ்சூரியாவில் புகுவதற்கு மங்கோலியா வசதியான படிக்கட்டாக' அமைந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## குற்றத்தடுப்பும் பொலிசாரும்

'குற்றச் செயல்கள் நாட்டில் அதிகரித்துவருகின்றன. குற்றவாளிகள் தப்பிவிடுகிறார்கள். இந்த நிலைக்குப் பொலிசாரே காரணம்' என்று நீதியரசர் வி. ரி. பண்டித குணவர்த்தன ஒரு வழக்கு விசாரணையின் போது குறிப்பிட்டிருப்பது பொலிசார் தமது பொறுப்பையும் கடமையையும் உணர்ந்து செயற்படுவதற்கு உதவ வேண்டும்.

இலங்கைப் பொலிசார் தான் உலக நாடுகளிலேயே குறைந்த சம்பளத்துடனும் வசதிக்குறைவோடும் வாழ்கிறார்களென்றும் இலங்கையின் ஜனத்தொகைக்கு இங்குள்ள பொலிசாரின் தொகை மிக மிகக் குறைவு என்றும் ஸ்கொட்லன்ட்யாட் பொலிஸ் நிபுணர் இங்கு சில மாதங்கள் தங்கியிருந்து ஆராய்ந்தபின் கருத்துத் தெரிவித்து பொலிசாரின் திறமையைப் பாராட்டியிருந்தார். பல வசதிக்குறைவுகளுடன் வாழ்க்கை நடத்தும் பொலிசார் அனைவரும் தமது கடமையைச் சரியாகச்செய்கிறார்களென்று சொல்லிவிட முடியாது. பெரிய குற்றச் செயல்களைக் கண்டுபிடித்து குற்றவாளிகளுக்குத் தண்டனைபெற்றுக் கொடுப்பதில் கவனம் செலுத்துவதைவிட லாம்பில்லாமல் சைக்கிளில் செல்வது, இரண்டு பேர் ஒரு சைக்கிளில் செல்வது போன்ற சிறிய குற்றச்செயலில் ஈடுபடுவோர்களுக்கு அந்தந்த இடத்திலேயே தண்டனை கொடுப்பதில்தான் தங்கள் திறமையைக் காண்பிப்பதில் சில பொலிசார் அதிக கவனம் செலுத்துகின்றனர். பொலிஸ் உடையையணிந்துகொண்டிருப்பதால் பொதுமக்களெல்லாம் தங்களுக்கு அடிமைகள் என்ற, அந்நிய ஆட்சிக்கால மனப்பான்மையில் சில பொலிசார் நடந்துகொள்கின்றனர். இதனால் நாட்டில் குற்றச்செயல்களைத் தடுப்பதற்கும், குற்றவாளிகளைக்கண்டு பிடித்துத்தண்டனை பெற்றுக் கொடுப்பதற்கும் நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்பதற்கும் தேவைப்

நிலையங்களில் நேர்முகப் பரீட்சை, பரீட்சை ஆகியவைகள் வைத்து தகுதியுடையவர்கள் தெரிவுசெய்யப்படுகிறார்களென்றும் பின்னர் பொலிஸ் பயிற்சி நிலையத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறார்களென்றும் சிங்களம் தமிழ் அல்லது ஆங்கிலத்தில்கல்விப் பொதுத்தராதரப்பத்திரப் பரீட்சையில்சித்திபெற்றிருக்க வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

பொலிசார் நாட்டின் எந்தப் பகுதியிலும் கடமையாற்றவேண்டியவர்கள் அவர்கள் சிங்களம், தமிழ் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்தால் அவர்களுக்கும் பொதுமக்களுக்கும் நல்லது. சிங்களமும் தமிழுமே இங்குள்ள மக்களின் மொழியாகையால் மக்களின் ஒத்துழைப்பைப்பெற வேண்டிய பொலிசாருக்கு இரு மொழிகளும் தெரிந்திருக்கவேண்டியது அவசியம். பொலிஸ் சேவையில் சேர்வதற்கு இது ஒருகட்டாய நிபந்தனையாக்கப்பட்டால் பலவிதத்திலும் நன்மையே. தமிழ் தெரியாத சிங்களப் பொலிசார் தமிழ்ப் பகுதிகளுக்கும் சிங்களம் தெரியாத தமிழ்ப் பொலிசார் சிங்களப் பகுதிகளுக்கும் அனுப்பப்படுவதனால் அவர்களும் விருப்போடு திருப்தியாகத் தங்கள் கடமையைச் செய்ய முடியாது. பொதுமக்களும் அச்சமின்றி பொலிசாருக்குஒத்துழைப்புக் கொடுக்கவோ, குற்றவாளிகளைக்கண்டுபிடிக்கஉதவவோ முன்வருவது கஷ்டம்.

பொலிஸ் சேவைக்கு ஆட்களை எடுப்பதிலும்அவர்களைக் கடமையாற்ற நியமிப்பதிலும் மாகாண ரீதியில் ஏற்பாடு செய்யப்படுவது பல விதத்திலும் நன்மையே. இங்கிலாந்தில் 'கவுண்டி கவுன்சில்கள் என்ற மாகாண சபைகளுக்கு பல அதிகாரங்களுடன் பொலிஸ் சேவைக்குத் தெரிவுசெய்வது நியமிப்பதுபோன்ற அதிகாரமும் இருந்துவருகிறது. அங்கு பொலிசாரின் மதிப்பும் அதிகம். கவுன்டி கவுன்சில்களுக்

# தொண்டு மூலமே நாவலரை நினைவு படுத்தலாம்

கோட்டை, திங்கள்

பேராதனைப் பல்கலைக் கழக இந்துமாணவர் சங்கம் இம்மாதம் 12-ம் தேதி திரு ச. தனஞ்சயராசசிங்கம் எழுதிய நாவலர் பணிகள் என்ற நூலை வெளியிட்டது. குறிஞ்சிக்குமரன் கோயிலில் இடம்பெற்ற இவ் விழா இறை வணக்கத்துடன் ஆரம்பிபிதது.

தொடர்ந்து இந்துமாணவர் சங்கத் தலைவர் நா. சுகுமாரன் நிகழ்த்திய வரவேற்புரையில் பல்கலைக்கழக மாணவர்கள் என்றால் பண்பற்றவர்கள் என்ற பிழையானஅபிப்பிராயம் கடந்த காலத்தில் நிலவி வந்தது. நலலபலகாரியங்களை செய்ய மாணவர்கள் முற்பட்டமையால அந்தத் தப்பபிப் பிராயம் சிறிது சிறிதாக தகர்க்கப்பட்டுவருகின்றது. இந்த நற்பணிகளில முன்னிற்பது எம் முயற்சியில் உருவான முருகன் ஆலயம் என்று கூறினார். அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் இந்து மாணவர் சங்கம் குன்றில் குமரனைக் குடியிருத்துவதையே தன் முக்கிய பணியாகக் கொண்டிருந்தது ஆனாலும் ஆன்மீக வளர்ச்சியுடன் அறிவு வளர்ச்சியும் இணைவது அவசியம் என்று உணர்ந்து அவர் பெயராற் தொண்டாற்றும் உத்தம உள்ளம் படைத்தவர்கள் நம்மிடையே தோன்ற ஈசன் அருள்புரிய வேண்டும் என்று குறிப்பிட்டார்.

நூலின் முதற் பிரதியை இந்து மாணவர் சங்கப் புரவலர் பேராசிரியர் த. சிவப்பிரகாசபிள்ளையிடமிருந்து குமரன் கோயிற் பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ தியாகராசக் குருக்கள் பெற்றுக்கொண்டார். நூலாசிரியர் திரு. ச. தனஞ்சயராசசிங்கம் நூலை வெளியிட உதவியவர்களுக்கு நன்றி செலுத்தியும் நூல் எழுந்த வரலாறு பற்றியும் உரை நிகழ்த்தினார். தொடர்ந்தும் நாவலர் பெருமான் பற்றிய ஆராய்ச்சி நூல்களை வெளியிடவிருப்பதாகக் கூறினார்.

இந்துமாணவர் சங்க உப தலைவர் திரு. மு. க. சிவபாதவிருதையர் நூலைவெளியிடப் பொருளுதவி புரிந்த பேராசிரியர் ஆ. சின்னத்தம்பிக்கும் மேலும் இவ் விழாவினைச் சிறப்பித்த ஏனையோர்க்கும் நன்றி தெரிவித்தார். [illegible] துடன் [illegible] யது.

பஸ்ஸுக்காக

## இவர்களும் கால்கடுக்க நிற்கின்றனராம்

மீதோட்டமுல்லை, திங்.

'பொயின்ட் கொன்றோலர்ஸ்' என்னும் புதிய உத்தியோகத்தர்கள் கடமையாற்றும் பஸ் வீதிகளில் பஸ் சேவை சீரடைந்துள்ளதாக கூறும் போக்குவரத்து அமைச்சர் திரு. சுகததாசாவின் கூற்றை கொழும்புவடக்கு பிரயாணிகள் சங்கமும் இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்களின் யூனியன்களும்மறுப்புத் தெரிவித்துள்ளன.

இப் புதிய உத்தியோகத்தர்கள நியமிக்கப் படுவதற்கு முன்னர் இருந்த நிலைமையிலும் இப்பொழுது இருக்கும் நிலைமையிலும் ஒருவித மாற்றமும் இல்லையென இச்சங்கங்கள் தெரிவிக்கின்றன. கொழும்பில் பஸ்பிரயாணிகள் கூட்டம் அதிகமாயுள்ள பஸ்தரிப்பு நிலையங்களில் சேவை செய்யவென இ.போ.ச.வில் சுமார் 200

# திருமலைச் செய்திகள்

— நமது திருமலை நிருபர் —

### மந்திரிக்கு மகஜர்

அண்மையில் திருக்கோணமலைக்கு விஜயஞ்செய்த உள்ளூராட்சி அமைச்சர் திரு. பிரேமதாசாவுக்கு திருக்கோணமலை நகரசபையினர் வரவேற்பளித்தனர். நகரசபைத் தலைவர் திரு. சி. சிவானந்தனும் உறுப்பினர்களும் ஆறுகோரிக்கைகள்கொண்ட மகஜர் ஒன்றை திரு. பிரேமதாசாவிடம் கையளித்தார்கள்.

திருக்கோணமலைப் பட்டினசபை குடிதண்ணீருக்கு கடற்படையினரையே நம்பியுள்ளதால் அதிகம் கஷ்டமடையவேண்டியுள்ளதுடன் ரூபா 75,000க்குக் குறையாத தொகையை வருடாவருடம் கடற்படைக்கு சழகம் கொடுக்கவேண்டியுள்ளதாகவும், எனவே தண்ணீர் விநியோகத்தை நகராண்மைக்கழகம் மேற்கொள்ள வேண்டுமென்றும், பொது நூல் நிலையத்திற்காக அத்திபாரக்கல 67-ம் ஆண்டு நாட்டப்பட்டும் இதுவரை கட்டடம் கட்டி முடிக்கப்படவில்லையென்றும், இதனைக் கட்டிமுடிக்கப் போதிய நிதி உதவி வழங்கவேண்டுமென்றும், பொதுமண்டபம், வடிகால திட்டம், புதிய வாடி வீடு, நகரநிர்வாகத்தில புதிதாகச் சேர்க்கப்பட்ட பகுதிகளின் முன்னேற்றம் சம்பந்தமாகவும் மகஜர்மூலம் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

### திருமலை வெற்றி

திருக்கோணமலை மக்கெய்ஸர் சுற்றுமதில் விளையாட்டரங்கில் திருமலை ஒலிம்பிக்ஸ் வீரர்களுக்கும் கம்பளை யுனைட்டட் வீரர்களுக்கும்இடையே பிரதமர்வெற்றிக் கிண்ணத்துக்கான 1-வது பிரிவு உதைபந்தாட்ட மோதல் நடைபெற்றபோது திருமலை வீரர்கள் வெகு சுலபமாக 3-0 என்ற முடிவுகளால் கம்பளைவீரரைத் தோற்கடித்தனர், ஆட்டம் ஆரம்பமாகி கால்மணி நேரத்தின் பின் 1வதுகோலை அந்தனி அடித்தார். இடைவேளையின்பின்னர் கமலநாதன் ஒருகோலையும், குகதாஸ் ஒருகோலையும் அடித்தனர். திரு. எச். டபிள்யு. இளையதம்பி மத்தியஸ்தம் வகித்தார்.

### விளையாட்டுப் போட்டி

திருகோணமலை பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் திருமலைபிரான்சிஸ் சவேரியார்கல்லூரி சாம்பியனாகியது. மக்கெய்ஸர் சுற்று மதில் விளையாட்டரங்கில்

வருமாறு:

தலைவர்: திரு. எச். எம் மாட்டின் சிங்கோ, செயலாளர்: பி. மார்க்கண்டு, பொருளாளர்; பி. எக்கநாயக்கா, உறுப்பினர்கள்: சி. குருநாதன், சி. இராமச்சந்திரன், பி. செல்லமணி, பி. சித்திரவேல், எம் கோணமலை.

0 0 0

### சாபக்கேடு

''தீண்டாமை சைவமக்களுக்கும் தமிழினத்துக்கும் ஒரு சாபக்கேடு. இன்று யாழ்ப்பாணத்தில் பல கோவில்களை, இன்னும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு திறந்து விடாமல் இருப்பது சைவசமயக் கோட்பாடுகளுக்கு முற்றிலும் மாறுபட்டது சைவமக்கள் ஆலயக்கதவுகளையும், தமது மனக் கதவுகளையும் திறக்க முன் வருதல் வேண்டும்.''

இவ்வாறு ஓய்வு பெற்ற நீதிபதி திரு. தனபாலசிங்கம் திருக்கோணமலை வசியோக சமாஜ ஆச்சிரமப் பிரவேச ஆண்டுவிழாவில் பேசுகையில் சைவ பெருமக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார் சிவயோக சமாஜப் புலவர் கங்காதரானந்தா இவ்விழாவில் சமூகம் அளித்திருந்தார் ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்னும் தலைப்பில் திரு. தனபாலசிங்கம் தொடர்ந்து பேசியதாவது:

சாதி பிறப்பு வேறுபாடுகளை நாயன்மார்களே நன்கு சாடியிருக்கின்றார்கள். சகல உயிர்களிடத்தும் உள்ளன்பு காட்டும் இறைவனை ஆலயங்கள் என்னும் சிறைக்குள் அடைத்து வைக்க யாருக்கும் உரிமையில்லை. ஆலயக் கதவுகளை அடைப்பதன் மூலம் இறைவனின் அருளினை மறுக்க முடியும் என்று எண்ண முடியாது.

### தமிழ் தின விழா

திருக்கோணமலை கல்வி நூற்றாண்டு விழாவையொட்டி தமிழ்தின விழா திருக்கோணமலை கஞ்சிமடம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. விழாவுக்கு மகா வித்தியாலய அதிபர் திரு. அ. பாலசுப்பிரமணியம் தலைமை தாங்கினார். போட்டிகளில் தெரிவான மாணவ மாணவிகள் மத்தியில் இசை நிகழ்ச்சிகள், பேச்சுக்கள் நாடகங்கள் நடைபெற்றன.

### விவசாயம் செய்ய தடை

பட்டியன் ஊற்றுக் குளத்தின் திருத்த வேலைகள் நடைபெற்று வருவதால் இங்குள்ள விவசாயிகளை வேளாண்மை செய்ய வேண்

## நாட்டிலும் நகரிலும்

சென்னை நகரத்தில் மயிலாப்பூர் ரஸிகரஞ்சனி சபா என்று ஆரம்பித்து பின்னர் மியூஸிக் அகடமி என்று விளங்கும் ஸ்தாபனத்தை அறியாதார் இல்லை அவர்கள் வருடாவருடம் நடக்கும் டிசம்பர் சங்கீத சீஸனில் பத்துப் பன்னிரண்டு நாட்களுக்குப் பற்பல இசைக்கச்சேரிகளை நிகழ்த்திவருபவர்கள், தலைசிறந்த வித்வான்களுக்கு ஆண்டு தோறும் 'சங்கீத கலாநிதி' என்ற பட்டம் வழங்குபவர்கள். இசைக்கலையின் நுட்பங்களைப் பற்றி இசைப் புலவர்களைக் கொண்டு ஆராய்ச்சிகள் நடத்திவருகிறவர்கள்.

இச்சபையிலுள்ள அங்கத்தவர்கள் எல்லோரும் இசைப் பற்றுள்ளவர்கள் மகா ரஸிகர்கள். ஆனால் சங்கீதத்தை முழுநேரத் தொழிலாகக் கொண்டவர்களல்ல. பெரும் உத்தியோகம் வகிக்கும் வக்கீல்களும், நீதிபதிகளும், டாக்டர்களும் அச்சபையில் அங்கத்தவர்களாயிருக்கிறார்கள். இசைக் கலையை வளர்க்கும் நோக்கத்துடன் இவர்கள் தங்கள் சொந்தப் பணத்தைச் சொந்தச் செலவு செய்து இசைத் தொண்டு புரிந்து வருபவர்கள்

எங்கள் ஈழநாட்டிலும் இப்படிச் சங்கீதச் சபைகள் எப்பொழுது தொழிற்படுமென்று இசைப் பிரியர்கள் பல வருடங்களாகக் கனவு கண்டு வந்தனர். அந்தக் கனவுநனவாகி இப்பொழுது பல இசைச்சங்கங்கள் இங்கு தோன்றியுள்ளன. இவற்றில் ஒன்று யாழ். சங்கீதச் சபை என்ற ஸ்தாபனம். இவர்கள் இப்பொழுது சில காலமாக மாதம் மாதம் ஒவ்வோர் இசைக்கச்சேரியை யாழ்ப்பாணத்தில் வெவ்வேறு இடங்களில் நடத்திவருகிறார்கள்.

சென்ற வெள்ளிக்கிழமை மாலை செல்வி ஜெகதாம்பிகை பரமநாதனின் பாட்டுக் கச்சேரி இச்சபையின் ஆதரவில் நல்லூரிலுள்ள சங்கீத ரஸிகர் திரு. செல்வநாயகத்தின் இல்லத்தில் நடைபெற்றது இப்பெண்மணியின் இசை ஞானத்தையும் அவருடைய அற்புதமான சாரீரத்தையும் அன்று வருகை தந்த சங்கீத கலாநிதி சித்தூர் சுப்பிரமணியம் பிள்ளையும், இராமநாதன் அகடமி அதிபர் திரு. கல்யாணகிருஷ்ண பாகவதரும் வேறு பல சங்கீத வித்வான்களும் பாராட்டினார்கள்.

செல்வி ஜெகதாம்பிகை ஏற்கனவே இராமநாதன் அகடமியின் 'சங்கீத ரத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்பான்மையில் சில பொலிசார் நடந்துகொள்கின்றனர். இதனால் நாட்டில் குற்றச்செயல்களைத் தடுப்பதற்கும், குற்றவாளிகளைக்கண்டு பிடித்துத்தண்டனை பெற்றுக் கொடுப்பதற்கும் நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்பதற்கும் தேவைப்படும் பொதுமக்களின் ஒத்துழைப்புப் பொலிசாருக்குக் கிடைக்கத்தவறிவிடுகிறது.

நாட்டில் குற்றச்செயல்களைத் தடுப்பதிலுள்ள மற்றொரு இடையூறு பொலிஸ் சேவைக்குத் தெரிவுசெய்யப்படுவதிலும் அவர்கள் சேவைக்கு அனுப்பப்படும் இடங்களையும் பொறுத்தது வருடாவருடம் 600 பேர் பொலிஸ் சேவைக்குத் தெரிவுசெய்யப்படுகிறார்களென்றும் அவர்கள் எப்படித் தெரிவுசெய்யப்படுகிறார்களென்பது பற்றியும் சில தினங்களுக்கு முன்னர் பொலிஸ் அதிகாரியொருவர் வானொலியில் உரைநிகழ்த்தினார். மாகாண பொலிஸ்

தில் 'கவுண்டி கவுன்சில்கள்' என்ற மாகாண சபைகளுக்கு பல அதிகாரங்களுடன் பொலிஸ் சேவைக்குத் தெரிவுசெய்வது நியமிப்பதுபோன்ற அதிகாரமும் இருந்துவருகிறது. அங்கு பொலிசாரின் மதிப்பும் அதிகம். கவுன்டி கவுன்சில்களுக்குள்ள அதிகாரங்கள் போதாதென்றும் மேலும் லண்டனில் குவிந்துள்ள அதிகாரங்களைப் பரவலாக்கவேண்டுமென்றும் இதற்காக எட்டு உள்ளூராட்சி மன்றங்கள் அமைக்கப்படவேண்டுமென்றும் கமிஷன் ஒன்று சிபார்சு செய்திருக்கிறது. இங்கும் பொலிஸ் சேவை, கல்விச் சேவை, முதலியவைகளையாவது மாகாண ரீதியில் செயல்படுத்தினால் நாட்டில் குற்றச்செயல்களைத் தடுக்கவும் தங்கள் மாகாணங்களின் அபிவிருத்தியில் மக்கள் அதிக அக்கறைகொள்ளவும் வாய்ப்பிருக்கும்.

ஞர். அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் இந்து மாணவர் சங்கம் குன்றில் குமரனைக் குடியிருத்துவதையே தன் முக்கிய பணியாகக் கொண்டிருந்தது ஆனாலும் ஆன்மீக வளர்ச்சியுடன் அறிவு வளர்ச்சியும் இணைவது அவசியம் என்றுணர்ந்து அவ்வப்போது பல நூல்களை வெளியிட்டு வந்துள்ளது. தொடர்ந்தும் வெளியிடும் இந்த வகையில் ஐந்தாவது வெளியீடாக 'நாவலர்பணிகள்'' என்ற இந்நூலை வெளியிடுவதில் எமது சங்கம் பெருமை கொள்கிறது என்று கூறினார்.

நூலை அறிமுகஞ் செய்து திரு. க. கிருஷ்ணானந்தசிவம், திரு சி முருகவேள் ஆகியோர் உரையாற்றினர் திரு சி முருகவேள் பேசுகையில் நாவலர் கழிவென்றொதுக்கிய இழி செயல்களையே செய்கின்ற நாம் நாவலர் பெருமை பேசுவதிற் பயனில்லை எவற்றைச் செய்ய வேண்டும். என்று அவர் திருவுளங் கொண்டாரோ அவற்றைச் செய்கின்றோமில்லை. இப்படிப்பட்ட நாங்கள் நாவலர் பெருமை பேசுவதும் அவருக்குச் சிலையெடுப்பதும் அவரை அவமதிப்பது போலாகிவிடும். சிலையெடுப்பது பெருந்தகையின் பெயரை வைத்து நாம் நல்ல பெயர் எடுக்கஅல்ல, நற்பணி பல செய்த நல்லாரை நினைவுகூர்ந்து அவர் பெராற் தொடர்ந்தும் தொண்டாற்றுவதையே சிலையெடுப்பதன் நோக்கமாகக் கொள்ள வேண்டும். நாவலர் பெருமானின் ஆன்ம வேகத்தை, அதன் உண்மைச் சொரூபத்தை

யிடப் பொருளுதவி புரிந்த பேராசிரியர் ஆ. சின்னத்தம்பிக்கும் மேலும் இவ்விழாவினைச் சிறப்பித்த ஏனையோர்க்கும் நன்றி தெரிவித்தார். இறை வணக்கத்துடன் விழா நிறைவெய்தியது.

## குடிநீர் வழங்குக

அல்லைப்பிட்டி, திங்கள்

புங்குடுதீவு மக்கள் தண்ணீர்ப்பஞ்சத்தால் மிகவும் பரிதவிக்கின்றனர். இவர்களது குடிதண்ணீர்ப் பிரச்னையை உடனடியாகத் தீர்த்துவைக்கவும்'' மேற்கண்டவாறு புங்குடுதீவுக் கல்விப் பகுதி சங்கமும் தீவுப்பகுதி ஐக்கிய இளைஞர் முன்னேற்றக்கழகத்தினரும் வட மாகாண அரசாங்க அதிபருக்கு ஓர் தந்தியை அனுப்பி வைத்துள்ளனர்.

## அன்பளிப்பு

அல்லைப்பிட்டி, திங்கள்

தீவுப்பகுதியைச் சேர்ந்த ஏழை மாணவர்களுக்கு இலவசமாக வழங்குவதற்கென புங்குடுதீவைச் சேர்ந்த வழக்கறிஞர் திரு. ப. கதிரவேலு ஜே.பி. அதிக அளவிலான பாடப் புத்தகங்களை அன்பளிப்புச் செய்துள்ளார் அண்மையில் இப்புத்தகங்களை புங்குடுதீவு கல்வி வளர்ச்சிக் கழகச் செயலாளர் திரு. அ. யோ. பூராசாவிடம் கையளிக்கப் பட்டன.

தமது தந்தையாரின் ஞாபகார்த்தமாக அன்பளிப்புச் செய்துள்ள திரு. கதிருவேலு ஏழை மாணவர்களுக்கெனப் பாடப் புத்தகங்களை வருடம்தோறும் தாம் அன்பளிப்புச் செய்யவிருப்பதாகவும் தெரிவித்தார்.

# உடுவில் கிராமசபை எஸ் ஜே. வி. க்கு மகஜர்

அளவெட்டி, திங்கள்

மின்தடை செய்யும் திட்டத்தைக்கைவிட நடவடிக்கை எடுக்கும்படி கோரி எஸ். ஜே. வியிடம் ஒரு மகஜரை உடுவில் கிராமசபை சமர்ப்பித்துள்ளது.

உடுவில் கிராமசபைத் தலைவர் திரு. முத்துலிங்கம் தமிழரசுத்தலைவர் திரு. எஸ். ஜே. வியிடம் சமர்ப்பித்துள்ள மின்தடைபற்றி மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

அரசாங்கம் வடபகுதியில் மிகவிரைவில் மின்தடை செய்வதென திட்டம் தீட்டியுள்ளது. இத்திட்டம் நிறைவேறினால் உள்ளூர் ஆட்சிமன்றங்களுக்கு பணம் கிடைக்காது. இதனால் கிராமசபை நல்லமுறையில் கிராமத்தை நடத்த முடியாது. அத்தோடு மக்களும் கஷ்டமடைவார்கள். அதனால் அத்திட்டத்தைக் கைவிடும்படி காணிநீர்ப்பாசன மந்திரியுடன் தொடர்பு கொண்டு எமக்கு உதவ வேண்டும். எனக் கேட்கப்பட்டுள்ளது.

எஸ். ஜே. வி. தாம் இது பற்றிக் காணி மின்சக்தி அமைச்சர் சி. பி. டி. சில்வாவுடன் பேச்சுவார்த்தை நடாத்தி தீர்த்து வைப்பதாக வாக்குறுதி அளித்துள்ளார்.

ஆசிரியருக்குக் கடிதம்

## மகத்தான கடமை

பத்திரிகா தர்மத்தைக் குழிதோண்டிப் புதைக்கிற பல பத்திரிகைகள் விற்பனையைப் பெருக்குவதற்காக முயற்சி செய்கின்ற இந்த நாளில் 'ஈழநாடு' தன் லட்சியப்போக்கிலிருந்து சிறிதும் பிறழாது செல்வது கண்டு என் இதயம் பூரிக்கிறது.

மக்களுக்குத் தேவையான செய்திகளையும் கட்டுரைகளையும் மட்டுமே 'ஈழநாடு' தருவதுகண்டு மனம் பூரிக்கிறேன். இந்த நாட்டிலே மனித சுபாவத்தின் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்டு மக்களைத்தவறான வழியிலே இட்டுச்செல்லும் போலி வேசத்தைக் கிழித்து மக்கள் விரும்பும் செய்திகளைப் படிக்காமல் மக்கள் படிக்கவேண்டிய செய்திகளைப் படிக்கச் செய்யும் மகத்தான கடமை ஒன்று இப்போதைக்கு 'ஈழநாடு பத்திரிகையிடம் தங்கியிருக்கிறது.

'ஈழநாடு' வாரப்பத்திரிகையின் பக்கங்களைக் குறைந்த பட்சம் எட்டு ஆகக் கூட்டி விலையையும் 25 சதபாகக்கூட்டி - என்போன்ற நல்ல பத்திரிகை படிக்கவிரும்பும் வாசகர்களின் ஆசையைப் பூர்த்தி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வண்ணம்
இரா. நாகலிங்கம்
(அன்புமணி)
ஆரயம்பதி-காத்தான்குடி

## தமிழரசு கிளை

யாழ்ப்பாணம், செவ்.

மண்டைதீவு தமிழரசுக் கட்சிக் கிளையின் உறுப்பினர் தெரிவுக் கூட்டம் சிளிநொச்சி ஆட்சி மன்ற உறுப்பினா திரு. கா.பொ. இரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

தலைவராக திரு. க. அமிர்தலிங்கமும், செயலாளராக திரு. சி. தட்சணாமூர்த்தியும், பொருளாளராக திரு. எஸ். பேர்டினன்டும் தெரியப்பட்டார்கள்.

7 கிராமசபை உறுப்பினர்கள் உட்பட 24 பேர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரியப்பட்டது

(கா. நி)

## பாவித்த கருவி

அளவெட்டி, திங்கள்

''கொம்பாஸ் கருவியால்'' பாடசாலை மாணவன் ஒருவனை அதே பாடசாலை மாணவன் குத்தினாராம். இச்சம்பவம் வசாவிளானிலுள்ள ஒரு பாடசாலையில் நிகழ்ந்துள்ளது.

படுகாயத்துக்குள்ளான மாணவன் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். காங்கேசன்துறைப் பொலிஸ் பகுதி சார்ஜன்ட் வீரசிங்கா விசாரணை நடாத்தினார்.

## நயினை அம்பாள்

நேற்றைய 'ஈழநாடு' இதழில் நயினை அம்பாள் ஆலயத்தைப் பற்றிய கட்டுரையை எழுதியவர்: நயினை சி. க பொன்னையா.

மையிலும் இப்பொழுது இருக்கும் நிலைமையிலும் ஒருவித மாற்றமும் இல்லையென இச்சங்கங்கள் தெரிவிக்கின்றன. கொழும்பில் பஸ்பிரயாணிகள் கூட்டம் அதிகமாயுள்ள பஸ்தரிப்பு நிலையங்களில் சேவை செய்யவென இ.போ.ச.வில் சுமார் 200 பேர் 'பொயின்ட் கொன்ரோலர்ஸ்' என்னும் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த உத்தியோகத்தர்களும் தம்மோடு சேர்ந்து பஸ்ஸுக்காகக் கால்கடுக்கக் காவல் நிற்பதாக பாதிக்கப்படும் பிரயாணிகள் கூட்டம் நமது நிருபரிடம் தெரிவித்தது.

ஒருபாதைக்கென ஒதுக்கப்படும் பஸ் வண்டிகள் எல்லாம் தினமும் ஓடுவதில்லை என்றும், அவற்றில் அதிகமானவை பழுதாகி ஓடமுடியாத காரணத்தினால் பழுதுபார்க்க டிப்போவுக்குத் திரும்பி விடுகின்றன வென்றும் தொழிலாளர் யூனியன்கள் தெரிவிக்கின்றன.

(வி. நி)

## உயிருடன்.........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறு வயதிலேயே யோகாசனப்பயிற்சிகள்செய்து வந்தது பின்னர் ஐ.சி.எஸ் பதவியிலிருந்து ராஜினாமாசெய்தது அரசியலில் புகுந்து ஸி.ஆர்.தாஸின் சிஷ்யரானது, மாண்டலேயில் கைது செய்யப்பட்டது. ஆகியவரலாற்று நிகழ்ச்சிகள் இந்த நூலில் விவரிக்கப்பட்டுள்ளன.

தேசாபிவிருத்தி திட்டங்களில் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் அவசியத்தை அந்தகக் காலத்திலேயே முதன் முதலாக தலைவர் இவர்தான் என்றும் ஆசிரியர் கூறுகிறார்.

## ஆண்டு விழா

திரு. கோடீஸ்வரன் வழக்கின் பலாபலன்கள் பழைய அரசாங்க ஊழியர்களுக்கு மட்டுமே எனப் புதிய ஊழியர் நினைக்கின்றனர். இது தவறாகும். திரு. கோடீஸ்வரன் வழக்கு முடிவால் மிகுந்த பலன் பெற விருப்பவர்கள் புதிய அரசாங்க ஊழியரே'' என்று திருக்கோணமலையில் நடைபெற்ற அரசாங்க தமிழ் தட்டெழுத்தாளர் சங்க 3-வது ஆண்டு விழாவில் சிறப்புசொற்பெருக்காற்றுகையில் தமிழ்எழுதுவினைஞர் சங்கங்கத்தைச் சேர்ந்த திரு. க. கணேசு குறிப்பிட்டார்.

## போட்டி

திருகோணமலை பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் திருமலைபிரான்சிஸ் சவேரியார்கல்லூரி சாம்பியனாகியது. மக்கெய்ஸர் சுற்றுமதில் விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டிகளில் 11 வயதுக்குட்பட்ட மாணவர்களின் போட்டிகளில் 15 புள்ளிகளும், 11வயதுக்குட்பட்ட மாணவிகளின் போட்டிகளில் 15 புள்ளிகளும் பெற்றே இவர்கள்சாம்பியனானார்கள். கல்வியமைச்சினால் ஒழுங்குசெய்யப்பட்ட இந்த விளையாட்டுப் போட்டிகளில் திருமலை மாவட்டத்தைச்சேர்ந்த 14 பாடசாலைகள் பற்குபற்றின. 13 வயதுக்குட்பட்ட மாணவருக்கான போட்டிகளில் 33 புள்ளிகளைப் பெற்ற அர்ச் சூசையப்பர் றோமன் கத்தோலிக்க பாடசாலை வெற்றிபெற்றது. 13 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான போட்டிகளில் 22 புள்ளிகளைப்பெற்று அத்திமொட்டை அரசினர் பாடசாலை வெற்றி பெற்றது. பிரதம கல்வி அதிகாரி திரு. ஏ. சந்திரசேகரம்பிள்ளை பிரதம அதிதியாகக் கலந்து கொண்வார்.

## வரவேற்புக் குழு

மே மாதம் 25-ந் திகதி திருக்கோணமலைக்கு வரும் நாவலர் சிலையைத் தம்பலகாமத்திற்கும் வரவழைத்து சிறப்பிப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அந்த குழுவின் நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு. ந. ஆமிர்தசாகரன் (பிரிவு காரியாதிகாரி), செயலாளர்: திரு. பொ. சித்திரவேல், பொருளாளர்: வழக்கறிஞர் எம். கே. செல்வராசா.

0 0 0

## விவசாயிகளுக்கு சொந்தமாகும்

வான் எலப் பகுதியில் பல வருடங்களுக்கு முன் குடியேறி விவசாயம் செய்து வரும் விவசாயிகளுக்கு அக்காணிகள் வெகு விரைவில் சொந்தமாகக் கொடுக்கப் படவுள்ளது. இதத்கவலை திருக்கோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் திரு சோமபாலா குணதிரா மூதூர் இரட்டைத் தொகுதி முதல்வரான ஜனாப் எம். ஈ. எச். முகமதலிக்கு அறிவித்துள்ளார்.

0 0 0

## நிர்வாகிகள்

கந்தளாய் பயிர்ச்செய்கைக்குழுவின் புதுவருட செயலவை உறுப்பினர்கள்

நாடகங்கள் நடைபெற்றன.

## விவசாயம் செய்ய தடை

பட்டியன் ஊற்றுக் குளத்தின் திருத்த வேலைகள் நடைபெற்று வருவதால் இங்குள்ள விவசாயிகளை வேளாண்மை செய்ய வேண்டாம் என அரசினர் கேட்டுள்ளனர் இந்த உத்தரவை மீறும் விவசாயிகள் மீது கமத் தொழிற் சேவை இலாகாவினர் சட்டபூர்வமான நடவடிக்கைகளை மேற் கொள்வர்.

## காணி சொந்தமாகும்

வானாற்றுப் பகுதிகளில் அத்துமீறிக் குடியேறியவர்களுக்கு இக்காணிகள் சொந்தமாக்கப்படவிருக்கின்றன இப்பகுதியில் பல வருடங்களுக்கு முன்னர் அத்துமீறிக் குடியேறி விவசாயம் செய்து வரும் விவசாயிகளுக்கு இந்தக் காணிகளைச் சொந்தமாக வழங்குவதற்கான அனுமதிகள் கமிஷனரிடமிருந்து கிடைக்கப்பட்டுள்ளன.

குடியேற்றக் காணிகள் வழங்குவதற்குத் தெரிவு செய்யப்படும் விவசாயிகளுக்கு இக்காணிகள் வெகு விரைவில் வழங்கப்பட உள்ளனவென்று திருமலை மாவட்ட அதிபர் மூதூர் முலாவது எம். பி. தெரிவித்துள்ளார்.

## யு. என். பி. பற்றி எம். பி.

''இலங்கைத்தீவு உணவுப் பிரச்னையில் தன்னிறைவு பெறுவதற்கும், தீவில் உள்ள பிற சமுதாயத்தினருடன் சரிசமமாக முஸ்லீம்களை நடாத்துவதற்கும் ஐ. தே. கட்சி அதன் தலைவரான திரு. டட்லி சேனநாயக்கா ஆட்சியின் கீழ்நாட்டு மக்களுக்குப் பல நன்மைகள் செய்துள்ளது.''

இவ்வாறு சின்னக் கிண்ணியா பட்டின சபை வாசிகசாலை மண்டபத்தில் நடைபெற்ற கிண்ணியா ஐ. தே. க. வாலிபர் முன்னணி ஒன்றை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் மூதூர் இரட்டைத் தொகுதியின் முதல்வர் திரு. எம். ஈ.எச். முகமது அலி கூறினார்.

0 0 0

## ஆற்றுப் பாலம்

சலப்பை ஆற்றுப் பாலத்தின் அத்திவாரக் கல் நாட்டு விழா ஆகஸ்ட் மாதத்தில் நடைபெறவிருக்கிறது. 3 இலட்ச ரூபா செலவில் இதைக் கட்டி

நிதி சித்தூர் சுப்பிரமணியம் பிள்ளையும், இராமநாதன் அகடமி அதிபர் திரு. கல்யாணகிருஷ்ண பாகவதரும் வேறு பல சங்கீத வித்வான்களும் பாராட்டினார்கள்.

செல்வி ஜெகதாம்பிகை ஏற்கனவே இராமநாதன் அகடமியின் 'சங்கீத ரத்தினம்' பரீட்சையிலும், சென்னை கர்நாடக இசைக் கல்லூரியின் 'வித்வான்' பரீட்சையிலும் தேறியவர். இவர் மீண்டும் தமிழகம் சென்று ஆசிரிய பரீட்சை எடுக்கவிருக்கிறார்.

அன்று அவர் பாடிய ராமப் பிரியா காம்போதி, முகாரி இராக உருப்படிகள் சிறந்து விளங்கின. பல்லவிக்குச் சங்கராபரணத்தை எடுத்துக்கொண்டு ஆதி தாளம் மிஸ்ர கதியில் அருமையான ஒரு பல்லவியையும் பாடினார். பக்கவாத்தியம் வாசித்த வயலின் திரு. சோமாஸ்கந்த சர்மாவும், மிருதங்கம் திரு. பாக்கியநாதனும், கடம் திரு. சுப்புசாமிப்பிள்ளையும் பாடகிக்கு ஒத்திசையாகவும், அனுசரணையாகவும் வாசித்தார்கள்.

யாழ். சங்கீதச் சபை இம்மாதிரி கச்சேரிகளை அடிக்கடி நடத்திவரவேண்டும். எல்லோரும் விரும்புவார்கள் என்பது நிச்சயம். இச்சபை செய்யும் இசைத் தொண்டை விரைவில் பொதுமக்கள் பதித்து மேலும் பல அங்கத்தவர்கள் அதில் சேர்ந்து அதைப் பலப்படுத்தவேண்டுமென்று ஈழத்து இசைப் பிரியர்கள் எல்லோரும் விரும்புவார்கள்.

சபைக் காரியதரிசி திரு. தனபாலசிங்கத்தையும், திரு. செல்வநாயகம் போன்ற இசைப் போஷகர்களையும் ஈழத்து இசையுலகம் பாராட்டாமல் இருக்க முடியாது.

—வழிப்போக்கன்

முடிக்க பொது வேலைத் திணைக்களம் ஆவன செய்து வருகின்றது. இதற்கான நிதி ஏற்கனவே ஒதுக்கப்பட்டிருந்தும் கூட உபகரணங்கள் பற்றுக் குறையினால் இவ் வேலை ஸ்தம்பித்திருந்தது. பொது வேலைப் பகுதி அமைச்சர் திரு. மொண்டே ஜயவிக்கிரமா முதற்கல்லை நாட்டுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969ம் ஆண்டு ஜூன் மாதம் 17ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org